**இந்தியத் தேர்தல் ஆணையம்**

**நிர்வாசன் சதன், அசோகா சாலை, புது தில்லி –110001**

எண்.23/2025–ERS (தொகுதி.II) நாள்:27.10.2025

பெறுநர்

தலைமைத் தேர்தல் அதிகாரிகள்,

(அந்தமான் நிகோபார் தீவுகள், சத்தீஸ்கர், கோவா, குஜராத், கேரளா, இலட்சத்தீவு, மத்தியப்பிரதேசம், புதுச்சேரி, இராஜஸ்தான், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம்)

**பொருள்: 01.01.2026–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியலின் சிறப்புத் தீவிர திருத்தம்.**

ஐயா/அம்மையீர்,

1. 1950 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 324 ஆம் பிரிவுக்கூறு; 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் ("RPA 1950") ஏனைய பொருந்தக்கூடிய விதிகளுடன் கூடிய 21 ஆம் பிரிவு; மற்றும் 1960 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு விதிகளின் தொடர்புடைய விதிகள் ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, அனைத்து மாநிலங்களில்/மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் (பிற்சேர்க்கை I) சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) மேற்கொள்வதற்கு ஆணையம் பிறப்பித்துள்ள 24.06.2025 ஆம் நாளிட்ட 23/2025–ERS (தொகுதி II) ஆம் எண் ஆணையைப் பார்வையிடுமாறு தங்களைக் கேட்டுக் கொள்வதற்கு நான் பணிக்கப்பட்டுள்ளேன். இதன்படி, மேற்சொன்ன மாநிலங்களில்/மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் 01.01.2026–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, சிறப்புத் தீவிர திருத்தம் மேற்கொள்ளுமாறு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

2. ஆணையத்தால், 24.06.2025 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட ஆணை மற்றும் வழிகாட்டிக் குறிப்புகளின் அடிப்படையில், பின்வரும் சேர்த்தல்கள்/திருத்தங்களுக்கு உட்பட்டு, சிறப்புத் தீவிர திருத்தத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

a. கணக்கெடுப்புப் படிவங்கள் திருப்பி அளிக்கப்படாத வாக்காளர்களைப் பொறுத்தவரையில், வாக்குச்சாவடி நிலை அலுவலர், அருகிலுள்ள வாக்காளர்களிடம் விசாரணை நடத்தி, அதன் அடிப்படையில், சாதாரணமாக குடியிருப்புப் பகுதியில் வசிக்காதவர்/முகவரி மாற்றம் செய்தவர்/இறந்த வாக்காளர்/இரட்டைப் பதிவு கொண்ட வாக்காளர் போன்ற சாத்தியமான காரணங்களில் ஒன்றைக் கண்டறிந்து, அதைக் குறித்துக் கொள்ளலாம். வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர்கள் சேர்க்கப்படாத மேற்சொன்ன வாக்காளர்களின் வாக்குச் சாவடி வாரியான பட்டியல்கள், அவ்வாறு அவர்களின் பெயர்கள் சேர்க்கப்படாததற்கான சாத்தியமான காரணங்களுடன், பொது மக்கள் அணுகும் வகையில், தொடர்புடைய ஊராட்சி அலுவலகம்/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்/ ஊராட்சி அலுவலர்கள்/ நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலர்கள் அலுவலகங்களின் அறிவிப்புப் பலகைகளிலும் காட்சிப்படுத்த வேண்டும். இவற்றைத் தொகுத்து, தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளத்தில் அணுகக்கூடிய வடிவத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

b. ஆதார் தொடர்பானவற்றிற்கு, 09.09.2025 (பிற்சேர்க்கை II) ஆம் நாளிட்ட 23/2025–ERS/தொகுதி.II ஆம் கடிதத்தில் வெளியிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவுகள் பொருந்தும்.

c. இந்த மாநிலங்களில்/மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில், சிறப்புத் தீவிர திருத்தத்திற்கு, மாற்றியமைக்கப்பட்ட கணக்கீட்டுப் படிவம் (பிற்சேர்க்கை III) மற்றும் உறுதிமொழிப் படிவம் (பிற்சேர்க்கை IV) பொருந்தும்.

d. கணக்கீடுக் காலத்தில், வாக்காளர்களிடமிருந்து யாதொரு ஆவணமும் சேகரிக்கப்படக்கூடாது.

e. முந்தைய சிறப்புத் தீவிரத் திருத்த வாக்காளர் பட்டியலுடன் இணைக்க இயலாத அத்தகைய வாக்காளர்களுக்கு, அவர்களின் தகுதியை உறுதிப்படுத்த, வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்ட பின்னரே, வாக்காளர் பதிவு அலுவலர் அறிவிப்பை வெளியிடுவார்.

f. தொடர்புடைய மாநிலங்களின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தொடர்புடைய முந்தைய தீவிரத் திருத்தங்கள், **பிற்சேர்க்கை V–** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அமையும்.

g. வீடுதோறும் நேரடியாகச் சென்று கணக்கீடு மேற்கொள்ளும்போது, புதிய வாக்காளராகப் பதிவு செய்ய விரும்புவோருக்கு வழங்குவதற்காக, நிரப்பப்படாத உறுதிமொழிப் படிவங்களுடன் (**பிற்சேர்க்கை IV**) குறைந்தது 30 எண்ணிக்கையிலான நிரப்பப்படாத படிவம் 6 ஐ வாக்குச் சாவடி நிலை அலுவலர் எடுத்துச் செல்ல வேண்டும்.

h. வாக்காளர் பதிவு அலுவலர், படிவம்–5 இல் வரைவு வெளியீட்டிற்கான அறிவிப்பை வெளியிடும் போது, அடுத்து வரும் தகுதியேற்படுத்தும் நாட்களுக்கு அதாவது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1, ஜூலை 1 மற்றும் அக்டோபர் 1 ஆகிய நாட்களுக்கு முன்கூட்டியே விண்ணப்பங்களையும் கோருவார்.

3. பின்வரும் கால அட்டவணையின்படி, குறிப்பிட்ட கால அளவிற்குள் சிறப்புத் தீவிரத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்:

| தொடர் எண் | செயல்பாடுகள் | அட்டவணை |
|---|---|---|
| 1 | முன்னேற்பாடுகள்/பயிற்சி/அச்சடித்தல் | 28.10.2025 (செவ்வாய்கிழமை) முதல் 03.11.2025 (திங்கட்கிழமை)வரை |
| 2. | **கணக்கீட்டிற்கான காலம்** | 04.11.2025 (செவ்வாய்கிழமை) முதல் 4.12.2025 (வியாழக்கிழமை)வரை |
| 3. | வாக்குச்சாவடிகளை மறுசீரமைத்தல்/ திருத்தியமைத்தல் | 04.12.2025 (வியாழக்கிழமை) |
| 4. | கட்டுப்பாட்டு அட்டவணையை நாளதுவரையாக்குதல் மற்றும் வரைவுப் பட்டியல் தயாரித்தல் | 05.12.2025 (வெள்ளிக்கிழமை) முதல் 08.12.2025 (திங்கட்கிழமை)வரை |
| 5. | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள். | 09.12.2025 அன்று (செவ்வாய்க்கிழமை) |
| 6. | ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் விண்ணப்பிக்கும் காலம் | 09.12.2025 (செவ்வாய்கிழமை) முதல் 08.01.2026 (வியாழக்கிழமை) வரை |

| | | |
|---|---|---|
| 7. | அறிவிப்பு கட்டம் (வழங்கல், விசாரணை மற்றும் சரிபார்ப்பு); கணக்கீட்டுப் படிவங்கள் மீதான முடிவுகள் மேற்கொள்ளுதல் மற்றும் ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் மீதான தீர்வு காணுதல் ஆகியவை ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு, இவை அனைத்தும் வாக்காளர் பதிவு அலுவலரால் முடிக்கப்பட வேண்டிய தேதி: | 09.12.2025 (செவ்வாய்கிழமை) முதல் 31.01.2026 ( சனிக்கிழமை) வரை |
| 8. | இறுதி வாக்காளர் பட்டியலின் தர அளவுகளை சரிபார்த்தல் மற்றும் இறுதி பட்டியல் வெளியீட்டிற்கு ஆணையத்தின் ஒப்புதலைப் பெறுதல். | 03.02.2026 க்குள் (செவ்வாய்கிழமை) |
| 9 | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 07.02.2026 (சனிக்கிழமை) |

4. மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு ஆணையை நிறைவேற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தின் 324 ஆம் பிரிவுக்கூறின் கீழ், வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரி (CEO)/மாவட்டத் தேர்தல் அதிகாரி (DEO)/வாக்காளர் பதிவு அலுவலர் (ERO)/உதவி வாக்காளர் பதிவு அலுவலர் (AERO)/ வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்/ வாக்குச்சாவடி நிலை அலுவலர் மற்றும் ஏனைய அதிகாரிகள் அனைவருக்கும் போதுமான பணியாளர்கள் மற்றும் மனித வள ஆதாரங்கள் வழங்கப்படுவதை தலைமைச் செயலாளர் உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் உத்தரவிடுகிறது. சிறப்பு தீவிர திருத்த (SIR) காலத்தின்போது, மாவட்டத் தேர்தல் அதிகாரி (DEO)/வாக்காளர் பதிவு அலுவலர் (ERO)/உதவி வாக்காளர் பதிவு அலுவலர் (AERO) என அறிவிக்கப்பட்ட யாதொரு பதவியும் காலியாக இல்லை என்பதையும், அத்தகைய அதிகாரி/அலுவலர் ஆணையத்தின் முன் அனுமதியின்றி பணியிடமாற்றம் செய்யப்படவில்லை என்பதையும் தலைமைச் செயலாளர் உறுதிசெய்ய வேண்டும்.

(பவன் திவான்)

செயலாளர்

நகல்:

1. சத்தீஸ்கர், கோவா, குஜராத், கேரளா, மத்தியப் பிரதேசம், புதுச்சேரி, இராஜஸ்தான், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்கள்,
2. அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளின் நிருவாக தலைமைச் செயலாளர்,

3.இலட்சத்தீவுகளின் நிருவாக ஆலோசகர்,

4. அனைத்து மாநிலங்கள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள்

5. உள் சுற்றறிக்கை (நிலையான சுற்றறிக்கைப் பட்டியலின் அடிப்படையில்)

பிற்சேர்க்கை–I

இந்தியத் தேர்தல் ஆணையம்

நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி –110001.

எண்.23/2025–ERS (தொகுதி.II) நாள்: 24.06.2025.

பெறுநர்

தலைமைத் தேர்தல் அதிகாரி

பீகார், பாட்னா

பொருள்: 01.07.2025–ஐத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியலின் சிறப்புத் தீவிர திருத்தம்

ஐயா,

1. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 324 ஆம் பிரிவுக்கூறு, 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் ஏனைய பொருந்தக்கூடிய விதித்துறைகள் ("RPA 1950") ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 01.07.2025 ஐத் தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு, 2025 ஆம் ஆண்டு மாநில சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள பீகார் மாநிலத்தில் (பிற்சேர்க்கை A) சிறப்புத் தீவிர திருத்தத்தை (SIR) மேற்கொள்ள ஆணையம் உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவிக்குமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

2. வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத் தீவிர திருத்தத்தை மேற்கொள்ளும்போது, தகுதியுள்ள நபர்கள் யாரும் விட்டுவிடப்படவில்லை என்பதையும் தகுதியற்ற நபர்கள் யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதையும் உறுதி செய்வதற்கு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அலுவலர் பொறுப்பாவார். சிறப்புத் தீவிர திருத்தத்தின் போது, இந்திய அரசமைப்பின் 326 ஆம் பிரிவுக்கூறு மற்றும் 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு மற்றும் 10–வது பிரிவின்படி, ஒவ்வொரு தகுதியுள்ள நபரும் வாக்காளராகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற அரசியலமைப்பு ஆணையை நிறைவேற்றுவதற்கு வாக்காளர் பதிவு அலுவலருக்கு தலைமைத் தேர்தல் அதிகாரி/மாவட்டத் தேர்தல் அதிகாரி உதவுவார். இதற்காக, வாக்காளர் பதிவு அலுவலர்கள், வாக்காளர் பட்டியலில் நபர் ஒருவரின் பெயரை பதிவு செய்வதற்கு முன்னர், அவர்களின் தகுதி குறித்து மனநிறைவு கொள்ள வேண்டும். விரிவான வழிகாட்டிக் குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளன (பிற்சேர்க்கை B).

3. சிறப்புத் தீவிர திருத்தத்தின் போது, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாயிலாக வாக்காளர் பதிவு அலுவலர்கள் இல்லந்தோறும் சென்று கணக்கீடு நடத்த வேண்டும். இந்த ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து, தற்போதுள்ள ஒவ்வொரு வாக்காளரும் கணக்கீட்டுப் படிவத்தை (பிற்சேர்க்கை C), வாக்குச்சாவடி நிலை அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு அல்லது <https://voters.eci.gov.in> என்ற இணைய தள முகவரியிலிருந்து கணக்கீட்டுப் படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு வகை செய்யப்பட வேண்டும். வாக்குச்சாவடி நிலை அலுவலர், கணக்கீட்டுப் படிவத்தின் நகல் ஒன்றைப் பெற்று, அதன் இரண்டாவது நகலில் அதனைப் பெற்றுக் கொண்டதற்கான

ஒப்புகையை கையொப்பமிட்டு ஏற்கெனவே உள்ள வாக்காளரிடம் வழங்க வேண்டும். ஆவணங்களுடன் திரும்பப் பெறப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களின் அடிப்படையில், வாக்காளர் பதிவு அலுவலர் வரைவு வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பார்.

4. மேலும், புதிய வாக்காளராக அல்லது வெளிமாநிலத்திலிருந்து வெளியே இடம் பெயருகிற வாக்காளராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பிக்கும் போது, படிவம் 6/ படிவம் 8 அப்படிவத்தில் அளிக்கும் உறுதிமொழிக்கு ஆதரவாக கூடுதல் உறுதிமொழிப் படிவம் (பிற்சேர்க்கை D) ஒன்று விண்ணப்பதாரரால் நிரப்பப்பட்டு அளிக்கப்பட வேண்டும் என மேலும் அறிவுறுத்தப்படுகிறது.

5. பீகாரில் 01.01.2003 ஆம் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, இறுதியாக 2003 ஆம் ஆண்டில் தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இறுதி தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட வாக்காளர்களின் தகுதி அப்போது உறுதிப்படுத்தப்பட்டதால், அத்தகைய வாக்காளர்கள் தங்கள் கணக்கீட்டுப் படிவத்துடன் (Enumeration Form) வாக்காளர் பட்டியலின் சுருக்கம் நீங்கலாக ஏனைய யாதொரு கூடுதல் ஆவணத்தையும் இணைக்கத் தேவையில்லை என்று ஆணையம் முடிவு செய்துள்ளது. எனவே, தலைமை தேர்தல் அதிகாரி (CEO)/மாவட்டத் தேர்தல் அதிகாரி (DEO)/வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) 01.01.2003 ஆம் நாளினை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலை அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கும் (BLOs) அச்சிடப்பட்ட நகலாகவும் அதனுடன், பொதுமக்கள் அனைவரும் தங்களின் கணக்கீட்டுப் படிவத்தை (பிற்சேர்க்கை–c) அளிக்கும்போது, ஆவணச் சான்றாக பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் வகையில், இணையதளத்தில் கிடைக்குமாறும் வகை செய்ய வேண்டும். தலைமை தேர்தல் அதிகாரி/மாவட்டத் தேர்தல் அதிகாரி/வாக்காளர் பதிவு அலுவலர்/வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஆகியோர் உண்மையான வாக்காளர்கள், குறிப்பாக வயதானவர்கள், நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் (PwD), ஏழைகள் மற்றும் ஏனைய பாதிப்புக்கு ஆளாகக்கூடியோர் போன்றோர் துன்புறுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதுடன், இயன்றவரையில் தன்னார்வலர்களைப் பணியமர்த்துவது உள்ளிட்ட வசதிகளை அவர்களுக்குச் செய்து தர வேண்டும்.

6. மேலும், வாக்காளர் பதிவு அலுவலர், யாதொரு வாக்குச் சாவடியிலும் ஆணையத்தின் முன் அனுமதி பெற்றாலன்றி மற்றபடி 1200 வாக்காளர்களுக்கு மிகாமலிருப்பதைக் கருத்தில் கொண்டு, புதிய வாக்குச்சாவடிகளின் தேவை குறித்து வாக்காளர் பதிவு அலுவலர் மதிப்பீடு செய்ய வேண்டும். வாக்குச்சாவடி பகுதி ஏனைய யாதொரு வாக்குச்சாவடி பகுதியுடன் பகிர்ந்து கொள்ளப்படாத வகையில் தீர்மானிக்கப்பட்டு அதன் எல்லை வரையறுக்கப்பட்டிருப்பதை வாக்காளர் பதிவு அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

7. பின்வரும் கால அட்டவணையின்படியான கால அளவிற்குள் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தவறாது மேற்கொள்ளப்பட வேண்டும்:

| | | |
|---|---|---|
| 1 | (i) வாக்காளர் பதிவு அலுவலர் தற்போதுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் ஏற்கனவே நிரப்பப்பட்ட கணக்கெடுப்புப் படிவத்தை (இரண்டு படிகளில்) அச்சிட்டு தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்குதல்.<br><br>(ii) வாக்காளர் பதிவு அலுவலர் திருத்த நடவடிக்கை குறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல்.<br><br>(iii) வாக்குச்சாவடி நிலை அலுவலர் வீடு வீடாகச் சென்று தற்போதுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் கணக்கெடுப்புப் படிவத்தை (இரண்டு படிகளில்) வழங்குதல்.<br><br>(iv) கணக்கெடுப்புப் படிவத்தை நிறைவு செய்வது குறித்து பொதுமக்களுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர் வழிகாட்டுதல்.<br><br>(v) வாக்குச்சாவடி நிலை அலுவலர் பொதுமக்களிடமிருந்து கணக்கெடுப்புப் படிவங்களை, தேவையான ஆவணங்களுடன் பெறவேண்டும் அல்லது பொதுமக்கள் இணைய வழியாகவும் கணக்கெடுப்புப் படிவங்களையும் ஆவணங்களையும் பதிவேற்றலாம்.<br><br>(vi) சேகரிக்கப்பட்ட படிவங்களை நாள்தோறும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் செயலி (BLO App)/ இசிஜநெட் (ECINet) இல் பதிவேற்றுதல்.<br><br>(vii) வாக்குச்சாவடி நிலை அலுவலர், அவ்வாறு பெறப்பட்ட ஒவ்வொரு கணக்கெடுப்புப் படிவத்திற்கும் பரிந்துரைகளை வழங்குதல்.<br><br>(viii) வாக்குச்சாவடி நிலை அலுவலர் மேற்பார்வையாளர் வாக்குச்சாவடி நிலை அலுவலரின் பணியை எண்ணிக்கை மற்றும் தரத்தின் அடிப்படையில் சரிபார்த்தல்.<br><br>(viii) உதவி வாக்காளர் பதிவு அலுவலர் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் பரிந்துரைக்கப்படாத அனைத்து கணக்கெடுப்புப் படிவங்களையும் (AERO) சரிபார்த்தல். | 25.06.2025 (புதன்கிழமை) முதல் 26.07.2025 (சனிக்கிழமை) வரை |
| 2 | வாக்குச்சாவடிகளை சீரமைத்தல் / மறு ஒழுங்கமைவு செய்தல் மற்றும் பிரிவு/பாகத்தின் எல்லைகள், வாக்குச் வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள இடங்கள் கருதப்பட்ட மறு வடிவமைப்பை இறுதி செய்தல் மற்றும் வாக்குச் வாக்குச்சாவடிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் பெறுதல். ஒரு வாக்குச் வாக்குச்சாவடியில் 1,200க்கும் மிகாமல் வாக்காளர்கள் இருப்பது நன்று. | 25.06.2025 (புதன்கிழமை) முதல் 26.07.2025 (சனிக்கிழமை) வரை |

| | | |
|---|---|---|
| 3 | கட்டுப்பாட்டு அட்டவணையை நாளதுவரையாக்கம் செய்தல் மற்றும் உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்களை அளித்துள்ள தற்போதுள்ள அனைத்து வாக்காளர்களின் பெயர்களைக் கொண்ட வரைவுப் பட்டியலைத் தயாரித்தல். | 27.07.2025 (ஞாயிற்றுக்கிழமை) முதல் 31.07.2025 (வியாழக்கிழமை) வரை |
| 4 | **01.08.2025 (வெள்ளிக்கிழமை) அன்று வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிடுதல்.** | |
| 5 | ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகளைத் தாக்கல் செய்வதற்கான கால அளவு. | 01.08.2025 (வெள்ளிக்கிழமை) முதல் 01.09.2025 (திங்கட்கிழமை) வரை |
| 6 | வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் காலகட்டத்தில் பெறப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்கள் மீதான முடிவுகள் மற்றும் ஒரே நேரத்தில் கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளுக்கு தீர்வுகாணப்பட்டு தேர்தல் பதிவு அலுவலர்களால் பணி நிறைவு செய்யப்பட வேண்டும். | 25.09.2025 (வியாழக்கிழமை) க்குள் |
| 7 | (i) இறுதி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்களின் தரநிலைகளை சரிபார்த்தல் மற்றும் இறுதி வெளியீட்டிற்கு ஆணையத்தின் அனுமதியைப் பெறுதல்.<br><br>(ii) தரவு தளத்தை நாளது வரையாக்குதல் மற்றும் துணைப் பட்டியல்களை அச்சிடுதல். | 27.09.2025 (சனிக்கிழமை) க்குள் |
| 8 | **வாக்காளர் பட்டியல் இறுதி வெளியீடு 30.09.2025 (செவ்வாய்க்கிழமை)** | |

8. மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்பு ஆணையை நிறைவேற்றும் வகையில், அரசமைப்புச் சட்டத்தின் 324 ஆம் பிரிவுக்கூறின் கீழ், வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள தலைமைத் தேர்தல் அதிகாரி (CEO)/மாவட்டத் தேர்தல் அதிகாரி (DEO)/வாக்காளர் பதிவு அலுவலர் (ERO)/உதவி வாக்காளர் பதிவு அலுவலர் (AERO)/ வாக்குச்சாவடி நிலை அலுவலர் மேற்பார்வையாளர்/ வாக்குச்சாவடி நிலை அலுவலர் மற்றும் ஏனைய அதிகாரிகள் அனைவருக்கும் போதுமான பணியாளர்கள் மற்றும் வள ஆதாரங்கள் வழங்கப்படுவதை தலைமைச் செயலாளர் உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் உத்தரவிடுகிறது. சிறப்பு தீவிர திருத்த (SIR) காலத்தின்போது, மாவட்டத் தேர்தல் அதிகாரி (DEO)/வாக்காளர் பதிவு அலுவலர் (ERO)/உதவி வாக்காளர் பதிவு அலுவலர் (AERO) என அறிவிக்கப்பட்ட யாதொரு பதவியும் காலியாக இல்லை என்பதையும், அத்தகைய அதிகாரி/அலுவலர் ஆணையத்தின் முன் அனுமதியின்றி பணியிடமாற்றம் செய்யப்படவில்லை என்பதையும் தலைமைச் செயலாளர் உறுதி செய்ய வேண்டும்.

**(பவன் திவான்)**
**செயலாளர்**

நகல் : பீகார் மாநில தலைமைச் செயலாளர் (தக்க நடவடிக்கைக்காக)

பிற்சேர்க்கை A

**இந்திய தேர்தல் ஆணையம்**

**நிர்வாசன் சதன், அசோகா சாலை, புது தில்லி–110001**

எண். 23/ERS/2025 நாள்:24.06.2025

**ஆணை**

**வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு தீவிர திருத்தம்**

1. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 324 ஆம் பிரிவுக்கூறு மற்றும் 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் ஆகியவை, நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்கும் மற்றும் அவற்றிற்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்குமான மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை தேர்தல் ஆணையத்திடம் நிலைபெற்றுள்ளதாலும்;
2. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மையை பேணி வருவது அடிப்படை காரணமாக இருப்பதாலும்;
3. வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்கான தேர்தல் செயல்முறை கட்டமைப்பு தகுதிக்கான நிபந்தனைகள் முறை மற்றும் நடைமுறை ஆகியவை 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 1960 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு விதிகள், ("RER, 1960") ஆகியவற்றின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளதாலும்;
4. இந்த நோக்கத்தின் அடிப்படையில், வாக்காளர் பட்டியல்களின் தீவிர திருத்தத்தை மேற்கொள்வதற்காக, 1952–56, 1957, 1961, 1965, 1966, 1983–84, 1987–89, 1992, 1993, 1995, 2002, 2003 மற்றும் 2004 ஆகிய ஆண்டுகளில் நாட்டின் அனைத்து அல்லது சில பகுதிகளில் புதிதாக வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்காக ஆணையம் செயலுறுத்தும் சட்ட விதிகளின் கீழ் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி உள்ளது. பீகாரில் கடைசியாக தீவிர திருத்தம் 01.01.2003 –ஐ தகுதி நாளாகக் கொண்டு 2003 ஆம் ஆண்டில் ஆணையத்தால் நடத்தப்பட்டிருப்பதாலும்;
5. வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதன் வாயிலாக தகுதியுள்ள அனைத்து குடிமக்களும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள் என்பதையும், அத்தகைய தகுதியுள்ள யாதொரு குடிமக்களும் வாக்காளர் பட்டியலிலிருந்து விடுபட மாட்டார்கள் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதாலும்;
6. அரசமைப்புச் சட்டத்தின் 326 –ஆம் பிரிவுக்கூறு, தகுதி நாளில், பதினெட்டு வயதுக்குக் குறையாதவராகவும், வேறு யாதொரு சட்டத்தின் கீழும் தகுதியிழப்பு செய்யப்படாதவராகவும் உள்ள ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படுவதற்கு உரிமையுடையவர் என்று குறிப்பிடுவதாலும்;
7. கடந்த 20 ஆண்டுகளில், அதிக அளவிலான பெயர் சேர்க்கைகள் மற்றும் பெயர் நீக்கங்கள் காரணமாக வாக்காளர் பட்டியலில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதை ஆணையம் கவனத்திற்கொண்டிருப்பதாலும், விரைவான நகரமயமாக்கல் மற்றும் கல்வி, வாழ்வாதாரம் மற்றும் ஏனைய காரணங்களால் மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அடிக்கடி குடியேறுவது ஒரு வழக்கமான போக்காகி இருப்பதாலும், சில வாக்காளர்கள் ஓர் இடத்தில் பதிவு செய்துவிட்டு, பின்னர் தங்கள் வசிப்பிடத்தை மாற்றி, முதலில் வசித்த இடத்தின்

வாக்காளர் பட்டியலில் இருந்து தங்கள் பெயர்களை நீக்காமல் வேறு இடத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்வதாலும், இது வாக்காளர் பட்டியலில் ஒரே பதிவு மீண்டும் மீண்டும் (repeated entries) இடம் பெறுவதற்கான வாய்ப்பை அதிகரித்திருப்பதாலும், எனவே, வாக்காளராகப் பதிவு செய்வதற்கு முன் ஒவ்வொரு நபரின் விவரத்தையும் சரிபார்க்க ஒரு தீவிர சரிபார்ப்பு இயக்கம் தேவைப்படுவதாலும்;

8. நபர் ஒருவர், வாக்காளர் பட்டியலில் தனது பெயரைப் பதிவு செய்வதற்கு அவர் இந்திய குடிமகனாக இருக்க வேண்டும் என்பது அரசியலமைப்பு சட்டத்தின் 326 – ஆம் பிரிவுக்கூறில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை முன் நிபந்தனைகளில் ஒன்று என்பதாலும், மேலும், குடிமக்களாக இருக்கும் நபர்களின் பெயர்கள் மட்டும் இடம்பெறுவதை உறுதிசெய்வது ஆணையத்தின் அரசியலமைப்புக் கடமை என்பதாலும்;
9. 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் ஏனைய பொருந்தக்கூடிய விதித்துறையின் கீழ், புதிதாக வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பது உட்பட வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு தீவிர திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிப்பதாலும்;
10. எனவே, ஆணையம் வாக்காளர் பட்டியல்களின் நம்பகத்தன்மையைக் காக்கும் அதன் அரசியலமைப்பு ஆணையை நிறைவேற்றுவதற்காக, நாடு முழுவதும் சிறப்பு தீவிர திருத்தத்தைத் தொடங்குவதற்கு தற்போது முடிவு செய்துள்ளது; இருப்பினும், பீகார் மாநிலத்தில் சட்டமன்றப் பொதுத் தேர்தல் இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுவதால், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் கால அட்டவணையின்படி பீகார் மாநிலத்தில் சிறப்பு தீவிர திருத்தத்தை நடத்த ஆணையம் முடிவு செய்துள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளில் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கால அட்டவணை உரிய நேரத்தில் தனித்தனியாக வெளியிடப்படும்.
11. பீகாரில் கடைசியாக தீவிர திருத்தம் 2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதால், வாக்காளர் பதிவு அலுவலர்கள் (EROs) 01.01.2003 ஆம் நாளைத் தகுதி நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியலை, குடியுரிமைக்கான கருதுகோள் உட்பட, அவர்களுக்கு வேறு உள்ளீடு கிடைக்காத வரையில் தகுதிக்குரிய ஆதாரமாகக் (probative evidence of eligibility), கருதுவார்கள்.
12. 2003 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு பெறாத யாதொரு நபரும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்காக, வாக்காளராகத் தங்கள் தகுதியை மெய்ப்பிப்பதற்கு வரையறுக்கப்பட்ட பலவிதமான தகுதியுள்ள அரசு ஆவணங்களை அளிக்க வேண்டும்.
13. தற்போதுள்ள வாக்காளர் பட்டியல்கள் சிறப்பு சுருக்க திருத்தத்தின் கீழ் 06.01.2025 அன்று வெளியிடப்பட்டு, அதன் பின்னர் தொடர்ந்து நாளது வரையாக்கம் செய்யப்பட்டு வருவதால், இந்த ஆணை வெளியிடப்படும் நாளன்றுள்ளவாறாக ஒவ்வொரு வாக்காளருக்கும் முன்னரே நிரப்பப்பட்ட கணக்கெடுப்புப் படிவம் (pre–filled enumeration form) வழங்கப்பட வேண்டும் என்றும், 25.7.2025 ஆம் நாளுக்கு முன்னர், உரியவாறு நிரப்பப்பட்ட கணக்கெடுப்புப் படிவத்தை அளித்துள்ள அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் மேலும் அறிவுறுத்துகிறது. இது ஒரு தீவிர திருத்தம் என்பதால், 25.7.2025 நாளுக்கு முன்னர் கணக்கெடுப்புப் படிவம் அளிக்கப்படாவிடின் அந்த வாக்காளரின் பெயர் வரைவுப் பட்டியலில் சேர்க்கப்பட மாட்டாது. இருப்பினும், உண்மையான வாக்காளர்கள், குறிப்பாக வயது முதிர்ந்தோர், உடல்நலிவுற்றவர்கள் / நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள், ஏழை எளியோர் மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய ஏனைய பிரிவினர், பாதிக்கப்படாமல் இருப்பதற்கும், தன்னார்வலர்களை பணியமர்த்துவதன் வாயிலாக அவர்களுக்கு இயன்றவரை உதவுவதற்கும், தலைமை தேர்தல் அதிகாரி / மாவட்ட தேர்தல்

அலுவலர் / தேர்தல் பதிவு அலுவலர் / வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

14. வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள சம்பந்தப்பட்ட நபர்களிடம் விசாரணை நடத்தாமலும், நியாயமான மற்றும் போதுமான வாய்ப்பளிக்காமலும், வரைவு வாக்காளர் பட்டியலிலிருந்து யாதொரு பதிவையும் நீக்கக்கூடாது. தேர்தல் பதிவு அலுவலரின் முடிவினால் யாதொரு நபர் பாதிக்கப்பட்டிருப்பின், 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 24 (a) ஆம் பிரிவு மற்றும் 1960 ஆம் ஆண்டு தேர்தல் பதிவு விதிகளின் 27 ஆம் விதியின் கீழ் மாவட்ட நடுவரிடம் வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் அவர் மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டாளர் மனநிறைவடையவில்லையாயின் 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 24 (b) ஆம் பிரிவு மற்றும் 1960 ஆம் ஆண்டு தேர்தல் பதிவு விதிகளின் 27 ஆம் விதியின் கீழ், மாவட்ட நடுவரின் உத்தரவு பெறப்பட்ட 30 நாட்களுக்குள் தலைமை தேர்தல் அதிகாரியிடம் இரண்டாவது மேல்முறையீட்டைச் செய்யலாம்.

15. மேலும், புதிய வாக்காளராக பதிவு செய்வதற்கு அல்லது பீகார் மாநிலத்திற்கு வெளியிலிருந்து வசிப்பிட மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கும் நேர்வில் படிவம் 6/ படிவம் 8–உடன் சேர்த்து உறுதிமொழி படிவத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு ஆதாரமாக விண்ணப்பதாரரால் கூடுதலாக உறுதிமொழி படிவம் (பிற்சேர்க்கை D) ஒன்றும் நிரப்பப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

ஆணைப்படி

இந்திய தேர்தல் ஆணையம்

ஒம்/–

(சஞ்சய் குமார்)

துணை தேர்தல் ஆணையர்

**பிற்சேர்க்கை B**

## சிறப்பு தீவிர திருத்தத்திற்கான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள்

**1. பயிற்சி**

a. இந்திய தேர்தல் ஆணையத்தின் முதன்மை இயக்குநர் (தகவல் தொழில்நுட்பம்), தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திலுள்ள மாநில தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு புதிய தகவல்தொழில்நுட்ப சிறப்பம்சங்கள் / கூறுகள் / செயலிகள் / படிவங்களை இணையவழியில் அளித்தல் போன்றவை குறித்து அறிந்துகொள்வதற்காக அவர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

b. இந்திய தேர்தல் ஆணையத்தின் புதிய செயலி (ECINeT) குறித்தும் குறிப்பாக, வாக்குச்சாவடி நிலை அலுவலர், வாக்காளர் மற்றும் அது தொடர்புடைய கூறுகள் குறித்து தலைமை தேர்தல் அதிகாரி / மாவட்ட தேர்தல் அலுவலர் / தேர்தல் பதிவு அலுவலர் / உதவி தேர்தல் பதிவு அலுவலர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

c. வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / வாக்குச்சாவடி நிலை அலுவலர் / மேற்பார்வையாளர்கள் ஆகிய பதவிகளுக்கான பணியிடங்கள் நிரப்பப்பட்டிருப்பதையும், அவர்கள் அண்மைக்கால தகவல் தொழில்நுட்ப நடைமுறைகள் மற்றும் அமைப்புமுறைகள் குறித்த பயிற்சி உட்பட தேவையான பயிற்சி (ம) அறிமுக பயிற்சிகளை உரிய நேரத்தில் நிறைவு செய்திருப்பதையும் தலைமை தேர்தல் அதிகாரி உறுதி செய்ய வேண்டும்.

d. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கவும், சிறப்புத் தீவிரத் திருத்தம் (SIR) தீவிரத்தன்மை குறித்து அவர்களுக்கு உணர்த்தவும், தேர்தல் பதிவு அலுவலர் (ERO) ஒரு அறிமுக வகுப்பினை இயன்றவரை விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**2. சீரமைத்தல், மறுவரிசைப்படுத்தல் மற்றும் பிரிவுகளை உருவாக்குதல்**

a. வீடுதோறும் சென்று மேற்கொள்ளப்பட்ட (H2H) வாக்காளர் கணக்கெடுப்பின் அடிப்படையில், ஆணையத்தின் முன் அனுமதி இல்லாமல் யாதொரு வாக்குச் சாவடியிலும் 1,200 வாக்காளர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, புதிய வாக்குச் சாவடிகளின் தேவையை தேர்தல் பதிவு அலுவலர் மதிப்பீடு செய்ய வேண்டும். ஒரு வாக்குச் சாவடிப் பகுதி வேறு எந்த வாக்குச் சாவடியுடனும் ஒன்றுடன் ஒன்று சேராமல் வரையறுக்கப்பட்டு எல்லை குறிக்கப்பட்டிருப்பதை தேர்தல் பதிவு அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

b. இவ்வாறு இணைக்கப்பட்ட/சேர்க்கப்பட்ட வாக்குச் சாவடிகளின் வாக்காளர்கள் இரண்டு கிலோமீட்டருக்கும் அதிகமான தொலைவிற்கு பயணிக்க வேண்டிய, எந்தவொரு இயற்கை இடர்களையும் கடந்து செல்ல வேண்டிய தேவை இருக்கக்கூடாது.

c. தரை தளத்தில் பொதுவான பகுதி / சமூகக் கூடங்கள் உள்ள உயரமான மாடிகள் கொண்ட / குழுவான வீட்டு வசதிச் சங்கங்கள் /குடியிருப்பு நலச் சங்கங்கள் ஆகியவற்றிலும், நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளிலும் புதிய வாக்குச் சாவடிகளை அமைப்பதற்காக, வாக்குச் சாவடிகளை சீரமைக்கும்போது விரிவான கள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

d. புதிய வாக்குச் சாவடிகளின் தேவையை மதிப்பீடு செய்த உடனேயே, தேர்தல் பதிவு அலுவலர் கூடுதல் வாக்குச் சாவடிகளின் தேவை குறித்து மாவட்டத் தேர்தல் அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும்.

e. 1951 ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கும் பொறுப்புடைய மாவட்டத் தேர்தல் அலுவலர், தற்போதுள்ள மற்றும் புதியதாக அமைக்கக் கருதப்பட்ட வாக்குச்சாவடிகளின் இடங்களில் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதா என்பதையும், தேர்தலை சுமுகமாக நடத்துவதற்காக ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட பிற அளவுகோல்களை நிறைவு செய்கிறதா என்பதையும் மதிப்பிடுவதற்கு, ஒரு மூத்த அலுவலர் 100% நேரில் சென்று ஆய்வு மேற்கொள்வதன் வாயிலாக உறுதி செய்ய வேண்டும்.

f. புதிய வாக்குச் சாவடிகள் அமைப்பதற்கான கருத்துருவை இறுதி செய்வதற்கு முன்னர், மாவட்டத் தேர்தல் அலுவலர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொள்ள வேண்டும். அதன் பிறகு, மாவட்டத் தேர்தல் அலுவலர் வாக்குச் சாவடிகளுக்கான ஒருங்கிணைந்த கருத்துருவுக்கு ஆணையத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

g. வாக்குச் சாவடிகள் 100% சரிபார்ப்பு / ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னரே, வாக்குச்சாவடிகளின் இடமாற்றத்திற்கான கருத்துரு, அதன் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை விவரங்களுடன் ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அனைத்து வாக்குச் சாவடிகள், புதிதாக அடையாளம் காணப்பட்ட மற்றும் உருவாக்க/இடமாற்றம் செய்யப் கருதப்பட்ட வாக்குச்சாவடியின் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை பெறப்பட்டு, அதன் விவரங்கள் இந்திய தேர்தல் ஆணைய வலைதளத்தின் முகப்புபக்கத்தில் (Dashboard) நாளதுவரையாக்கப்பட வேண்டும்.

h. ஆணையத்தின் ஒப்புதலுக்குப் பின்னர், வரைவு வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பொருட்டு, தேர்தல் பதிவு அலுவலர் இந்திய தேர்தல் ஆணைய இணைய (ECINet) கட்டுப்பாட்டு அட்டவணையை (Control Table) நாளதுவரையாக்கி, தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளின்படி பாகங்களை (Parts) உருவாக்க வேண்டும்.

i. வாக்காளர் பட்டியலில் ஒரு புதிய வாக்குச் சாவடி உருவாக்கப்பட்டவுடன், தேர்தல் பதிவு அலுவலர், வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாயிலாக, வாக்குச் சாவடியின் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை போன்ற தரவுகளுடன், வாக்குச் சாவடியின் புகைப்படங்கள் மற்றும் அமைவிடத் தகவல்கள் இந்திய தேர்தல் ஆணைய இணைய செயலியில் (ECINet) உள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலரின் பகுதியிலிருந்து பதிவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

j. **முகவரிகளை தரநிலைப்படுத்தல்:** வாக்காளர்கள் பட்டியலில், வீட்டு எண் மற்றும் கட்டடத்தின் தள எண் ஆகியவற்றின்படி வாக்காளர்கள் வரிசைப்படுத்தப்படுவர். வாக்காளர்களின் முகவரியைத் தரநிலைப்படுத்த, பட்டியலைத் தயாரிக்கும்போது பின்வருமாறு முகவரி வரிசைப் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்:

i. வீட்டு எண்/ மாடி குடியிருப்பு எண்/ கதவு எண் (வீட்டின் பெயர், இருப்பின்)

ii. தள எண் (பல மாடிக் கட்டடமாக இருக்கும் நேர்வில்)

iii. கட்டட எண்/ தொகுதி எண்/ வளாக எண் (கட்டடத்தின் பெயர், இருப்பின்)

iv. மாடிகுடியிருப்பு எண்

v. பிரிவு

vi. வார்டு எண்*

vii. தெரு / சாலை/ சந்து*

viii. பகுதி

ix. பகுதி / இடம்*

x. இருப்பிட அடையாளம், ஏதேனும் இருந்தால்

xi. கிராமம்/ பேரூர் / நகரம்*

xii. துணை மாவட்டம்/ வட்டம்

xiii. மாவட்டம்

xiv. மாநிலம்*

xv. அஞ்சல் குறியீட்டு எண்*

**k. குடும்ப குழுவாக்குதல்:**

[*] என்று குறிக்கப்பட்ட புலங்கள் வாக்காளர் விவரங்களில் கட்டாயமாகக் குறிப்பிடப்பட வேண்டும், மீதமுள்ள புலங்கள் விருப்பப் புலங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவையான இடங்களில் சேர்க்கப்படலாம் (நகர்ப்புறப் பகுதிகள் போன்று). தலைமைத் தேர்தல் அதிகாரி (CEO) / மாவட்டத் தேர்தல் அலுவலர் (DEO) மாநிலத்திலுள்ள /மாவட்டத்திலுள்ள வழக்கத்தின்படி மற்ற பதிவுகளை கட்டாயப் பதிவுகளாக சேர்க்கலாம். ஊராட்சி/நகராட்சி அதிகாரிகளால் வழங்கப்பட்ட வீட்டு எண் எதுவும் கிடைக்கவில்லை என்றால், வாக்காளர் பட்டியலில் கருத்தியல் எண் (notional number) வழங்கப்படும். இத்தகைய நேர்வுகளில், வீட்டு எண் கருத்தியலானது என்று வழக்கமாக குறிக்கப்படும். வாக்காளர் விவரங்களில் கட்டாய முகவரி புலங்கள் வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்படும், மேலும் அது வாக்காளரின் புகைப்படத்துடன் கூடிய வக்காளர் அடையாள அட்டையில் உள்ளதைப் போன்றே அமைந்திருக்கும்.

i. வீடுதோறும் சென்று (H2H) கணக்கெடுத்ததன் அடிப்படையில், ஒரு புதிய வாக்குச்சாவடியை உருவாக்கும்போது அல்லது தற்போதுள்ள வாக்குச் சாவடிகளில் பிரிவுகளை உருவாக்கி / இணைத்து / அருகிலுள்ள வாக்குச் சாவடிகளின் பிரிவுகளுடன் இணைத்து மறு உருவாக்கம் / மறுசீரமைக்கும்போது தேர்தல் பதிவு அலுவலர் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:

1. ஒரே கதவு எண் / குடியிருப்பு எண்ணில் வசிக்கும் யாதொரு குடும்பத்தின் உறுப்பினர்கள் விவரங்களும் பிரிக்கப்படாமல் இருக்க வேண்டும், மேலும் அனைத்து குடும்ப உறுப்பினர்கள் விவரங்களும் ஒரே பிரிவிலும் ஒரே பாகத்திலும் வைக்கப்பட வேண்டும்.

2. ஒரு கட்டடத்தில் வசிக்கும் வாக்காளர்கள் விவரங்கள் ஒரே பகுதியில் பதிவு செய்யப்பட வேண்டும்.

3. இயன்றவரையில், ஒரு தெருவில் வசிக்கும் வாக்காளர்கள் ஒரே பாகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

ii. அனைத்துக் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அண்டை வீட்டார் விவரங்கள் ஒரு பிரிவில் குழுவாக்குவதற்கு, தேர்தல் பதிவு அலுவலர் ஒரே வீடு/கட்டடம்/கட்டட பகுதியில் உள்ள

அனைத்து வாக்காளர்களையும், ஒரே பிரிவில், இயன்றவரையில் ஒரே பாகத்தில் வைத்திருக்க வேண்டும்.

3. வீடுதோறும் சென்று (H2H) கணக்கெடுப்பு மேற்கொள்ளுதல்

a. வீடுதோறும் சென்று (H2H) கணக்கெடுப்பு மேற்கொள்ளும் செயல்முறையின் தொடக்கத்தில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பின்வருவன வழங்கப்பட வேண்டும். அவையாவன:

i. அடையாள அட்டை, ஏற்கனவே வழங்கப்படவில்லையாயின், மற்றும்

ii. பதிவேடுகள், எழுதுபொருட்கள், தொப்பிகள்/டி–சட்டைகள் (T– shirts) மற்றும் கணக்கீடுச் செயல்பாட்டின்போது தேவைப்படும் பிற அத்தியாவசிய எழுதுபொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறப்புத் தீவிர திருத்தம் என்று பெயரிடப்பட்ட ஒரு பை (தொகுப்பு).

iii. இந்த ஆணை வெளியிடப்பட்ட நாளில் தற்போதுள்ள ஒவ்வொரு வாக்காளருக்கும் ஏற்கனவே அச்சிடப்பட்ட விவரங்களுடன் கூடிய இரண்டு நகல்களில் கணக்கெடுப்புப் படிவங்கள் (பிற்சேர்க்கை C) வழங்கப்படும். ஏதேனும் அவசரச் சூழ்நிலையில் பயன்படுத்துவதற்கான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நிரப்பப்படாத கணக்கெடுப்புப் படிவங்களும் வழங்கப்படும்.

b. வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, தற்போதுள்ள வாக்காளர்களின் ஏற்கனவே அச்சிடப்பட்ட விவரங்களுடன் கூடிய கணக்கெடுப்புப் படிவங்களை ஒவ்வொரு வாக்காளருக்கும் இரண்டு நகல்களில் வழங்கி, அவர்கள் படிவத்தை நிரப்புவதற்கு உதவ வேண்டும்.

c. கணக்கெடுப்பின்போது யாதொரு வீடு பூட்டியிருப்பதாக அல்லது மூடியிருப்பதாக வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLO) கண்டறிந்தால், கணக்கீட்டுப் படிவங்களை வீட்டிற்குள் போட்டுவிட்டு, நிரப்பப்பட்ட படிவங்களை பெறுவதற்காக குறைந்தது மூன்று முறை செல்ல வேண்டும்.

d. முன்னரே நிரப்பப்பட்ட கணக்கெடுப்புப் படிவத்தை பதிவிறக்கம் செய்யவும், நிரப்பப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்களை இணையவழியில் (online mode) பதிவேற்றம் செய்யவதற்கும் தற்போதுள்ள வாக்காளர்களுக்கு வகைசெய்யப்படும்.

e. ஒவ்வொரு வாக்காளரும் இந்த படிவத்தை தேவையான தகவல்கள் மற்றும் சுய சான்றளிக்கப்பட்ட ஆவணங்களுடன் வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் அளிக்க வேண்டும்.

f. வாக்காளர்களிடமிருந்து நிரப்பப்பட்ட கணக்கீட்டுப் படிவத்தினை பெற வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஒவ்வொரு வீட்டிற்கும் மீண்டும் செல்ல வேண்டும். தேவையான ஆவணங்களுடன்கூடிய கணக்கீட்டுப் படிவத்தின் ஒரு நகலைத் வாக்குசாவடி நிலை அலுவலர் (BLO) பெற்று, தன்னிடம் வைத்துக் கொண்டு, அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சீட்டை மற்றொரு நகலில் வழங்க வேண்டும். இந்த நகலினை விண்ணப்பதாரர் தன்னிடம் வைத்துக்கொள்ள வேண்டும்.

g. வாக்காளர் ஒருவர், தேவையான ஆவணங்களுடன் நிரப்பப்பட்ட படிவத்தை இணைய வழியில் பதிவேற்றியிருப்பின், வாக்குச் சாவடி நிலை அலுவலர் அந்த வாக்காளரின் இல்லத்திற்குச் செல்லும் போது, ஆவணங்களை சரிபார்ப்பார்.

h. வாக்குச் சாவடி நிலை அலுவலர், மேற்சொன்ன படிவங்களையும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களையும் வாக்குச் சாவடி நிலை அலுவலர் / இந்திய தேர்தல் ஆணைய இணைய அலைபேசிச் செயலி (Mobile Application) வாயிலாகப் பதிவேற்ற

வேண்டும். அதன் பின்னர், வாக்குச் சாவடி நிலை அலுவலரால் சேகரிக்கப்பட்ட அனைத்து வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களையும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களையும், ஆவணப்படுத்தும் நோக்கங்களுக்காக சம்பந்தப்பட்ட தேர்தல் பதிவு அலுவலரிடம் / உதவி தேர்தல் பதிவு அலுவலரிடம் அளிப்பார்.

4. வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிடுதல்:

a. வாக்காளர் பதிவு அலுவலர் வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களையும் சேர்த்து, வரைவு வாக்காளர் பட்டியலை தயாரிப்பார். வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர், கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் (Claims &Objections) காலத்தில் அவ்வாறு பெறப்பட்ட வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களின் மீது முடிவுகள், எடுக்கப்பட வேண்டும். இருப்பினும், தகுதி தொடர்பாக சந்தேகத்திற்குரிய இனங்களை அடையாளம் கண்டறிவதற்கு வாக்காளர் பதிவு அலுவலர் /உதவி வாக்காளர் பதிவு அலுவலர், அவற்றை ஆய்வு செய்யத் தொடங்குவார்.

b. வீடு தோறும் சென்று கணக்கெடுத்த போது, வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் நிரப்பப்பட்ட கணக்கெடுப்பு படிவத்தை அளித்துள்ள அல்லது இணைய வழியில் பெறப்பட்டு வாக்குச் சாவடி நிலை அலுவலரால் சரிபார்க்கப்பட்ட அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறும். கணக்கெடுப்பு படிவங்கள் பெறப்படாத ஏனைய வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட மாட்டாது.

c. வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் நிரப்பப்பட்ட வாக்காளர் கணக்கீட்டுப் படிவங்களை அளிக்க இயலாத யாதொரு வாக்காளர் குறித்த நேர்வில், படிவம் 6 உடன் குறிப்பிடப்பட்டுள்ள உறுதி மொழி படிவத்தையும் (Annexure–D) கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளுக்கு அளிக்கப்பட்ட காலத்தில் தங்கள் பெயரை சேர்ப்பதற்கு தாக்கல் செய்யலாம்.

d. முன்னர் வாக்காளர் தரவு தளத்தில் குறியிடப்பட்ட நீதித்துறை உறுப்பினர்கள், பொதுப் பிரதிநிதிகள், அறிவிக்கப்பட்ட அரசு பதவி வகிப்பவர்கள், கலை, கலாச்சாரம், பத்திரிகை, விளையாட்டு மற்றும் பொதுப் பணிகள் முதலிய துறைகளை சேர்ந்த நபர்களின் பெயர்கள், வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். இதனால், கோரிக்கை மற்றும் மறுப்புரை காலத்தில் தேவையான ஆவணங்களையும் சேகரிக்க முடியும்.

e. தேர்தல் பதிவு அலுவலர், படிவம் 5–இல் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கான அறிவிப்பை வெளியிடும் போது, அடுத்த தகுதி நாளான அதாவது 01.10.2025 ஆம் நாளுக்கு முன்கூட்டியே விண்ணப்பங்களை கோருவார்.

5. கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளுக்கான காலம்:

a. வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்ட பின்னர், வாக்காளர் பதிவு அலுவலர் /உதவி வாக்காளர் பதிவு அலுவலர், அரசமைப்பு சட்டத்தின் 326 ஆம் பிரிவு மற்றும் 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின், (RPA 1950) பிரிவுகள் 16 மற்றும் 19 ஆம் பிரிவுகளுக்கிணங்க, அவ்வாறு செய்வதற்காக, வாக்காளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளுடன் கருதப்பட்ட/உத்தேச வாக்காளர்களின் தகுதி நிலையை இதற்காக, அளிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் நேரடியான ஆய்வு அறிக்கைகள் அடிப்படையில், வாக்காளர் பதிவு அலுவலர் /உதவி வாக்காளர் பதிவு அலுவலர், மனநிறைவடைய வேண்டும்.

b. ஏதேனும் பரிந்துரைக்கப்பட்ட வாக்காளரின் தகுதி குறித்து வாக்காளர் பதிவு அலுவலர்/உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு ஐயப்பாடு எழும் நேர்வுகளில் (தேவையான ஆவணங்களை அளிக்கப்படாததால் அல்லது வேறு ஏதேனும்

காரணங்களால்), அவர் தாமாகவே (suo motu) விசாரணையைத் தொடங்கி, அத்தகைய வாக்காளர்களுக்கு அவரது பெயர் வாக்காளர் பட்டியலிருந்து ஏன் நீக்கப்பட கூடாது? என்பதற்கான அறிவிப்பை அனுப்புவார். கள விசாரனை, ஆவணப்படுத்துதல் அல்லது ஏனைய வகையில் பெற்ற தகவல்களின் அடிப்படையில், வாக்காளர் பதிவு அலுவலர் /உதவி வாக்காளர் பதிவு அலுவலர், அத்தகைய வாக்காளர்களை இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது குறித்து என்பதை முடிவு செய்வார். அத்தகைய ஒவ்வொரு நேர்விலும், தேர்தல் பதிவு அலுவலர் /உதவி தேர்தல் பதிவு அலுவலர், எழுத்துப்பூர்வ ஆணை (Speaking Order) ஒன்றை அளிக்க வேண்டும். மேலும், ஐயத்திற்குரிய அயல்நாட்டு நாட்டு நபர்கள் குறித்த நேர்வுகளை, 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியிடம், அனுப்ப வேண்டும். இந்த நோக்கங்களுக்காக, உதவி தேர்தல் பதிவு அலுவலர், 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 13C (2) ஆம் பிரிவின் கீழ், தேர்தல் பதிவு அலுவலருக்கான அதிகாரங்களை தன்னிச்சையாக செயல்படுத்துவார்.

c. ஒரு வாக்காளராக பதிவு செய்வதற்கான தகுதி நிபந்தனைகள் ஏற்கனவே, தேர்தல் பதிவு அலுவலரால் அவரது மனநிறைவிற்கேற்ப சரிபார்க்கப்பட்டு வருவதாலும், அவ்வாறான மனநிறைவை வாக்காளர் பதிவு அலுவலர் அடைவதற்கு அடிப்படையாக இருந்த ஆவணங்கள், தற்போதைய தொழில்நுட்பம் வகை செய்வதன் காரணமாக, இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்படுவது அவசியமாகும்.

d. வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளராக பெயர் சேர்ப்பதற்கான ஒவ்வொரு கோரிக்கையும், படிவம்–6 இல் புதிய உறுதி மொழி படிவத்துடன் (Declaration Form) இணைத்து அளிக்கப்பட வேண்டும்.இனிமேல், அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்களும், நிலுவையிலுள்ள படிவம்–6 இல் விண்ணப்பங்கள் தொடர்புடைய வரையறுக்கப்பட்ட உறுதிமொழி படிவத்தையும் 01.10.2025 ஆம் நாளினை தகுதியான நாளாக குறிப்பிட்டு முன்கூட்டியே பெறப்பட்ட கோரிக்கைகளையும் பெற்று கொண்டதை உறுதி செய்ய வேண்டும்.

e. தொகுதிக்குள் அல்லது தொகுதிக்கு வெளியே இருப்பிடத்தை மாற்றுதல், பதிவுகளில் திருத்தம் அல்லது புதுப்பித்தல், புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டையை (EPIC) மாற்றுதல், அல்லது மாற்று திறனாளிகள் என்று குறியீடுதல் (PwD marking) ஆகியவற்றுக்கான விண்ணப்பம் படிவம்–8 இல் அளிக்கப்பட வேண்டும். அவ்வாறான விண்ணப்பம், அந்த பதிவு தொடர்பான வாக்காளரால் மட்டுமே அளிக்கப்பட வேண்டும். பீகார் மாநிலத்திற்கு வெளியேயிருந்து இருப்பிடத்தை மாற்றுவதற்கு, படிவம்–8 உடன் புதிய உறுதி மொழிப் படிவத்தையும் அளிக்க வேண்டும்.

### 6. கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் பட்டியலை காட்சிப்படுத்தல்

a. வாக்காளர் பதிவு அலுவலர், படிவம்–9, 10, 11, 11A மற்றும் 11B ஆகியவற்றின் கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளுக்கான பட்டியல்களைத் தயாரித்து, அதன் ஒரு நகலை அவரின் அலுவலகத்திலுள்ள அறிவிப்புப் பலகையில் ஒவ்வொரு பணி நாளிலும் காட்சிப்படுத்த வேண்டும்.

b. பெறப்பட்ட அனைத்து கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளின் பட்டியலையும், தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளத்திலும் வெளியிட வேண்டும், இதன் வாயிலாக குடிமக்கள் இந்தப் பட்டியலைப் பார்க்கவும், ஏதேனும் மறுப்புரைகள் இருப்பின் அவற்றை சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலரிடம் தெரிவிக்கவும் இயலும்.

c. தலைமைத் தேர்தல் அதிகாரி, அந்த கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் குறித்த பட்டியல் தனது இணையதளத்தில் கிடைக்கிறது என்ற தகவலை போதுமான அளவில் விளம்பரப்படுத்த வேண்டும். மேலும், அந்தப் பட்டியலில் உள்ள யாதொரு கோரிக்கை குறித்தும் மறுப்புரைகளை தெரிவிக்க விரும்பினால், அவர்கள் அந்த மறுப்புரையை

சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலரிடம் அளிக்கலாம் என்பதையும் தெரிவிக்க வேண்டும். இந்தத் தகவல், அரசியல் கட்சிகளுடன் கூட்டங்கள் நடத்தியும் அவர்களுக்கு எழுத்துப்பூர்வ தகவல்கள் அனுப்புவதன் வாயிலாகவும், பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

d. வாக்காளர் பதிவு அலுவலர், கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் பட்டியலை வாரந்திர அடிப்படையில் அரசியல் கட்சிகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்தப் பட்டியல் ஒட்டு மொத்தமானதாக இல்லாமல், அவ்வப் போது புதிதாகச் சேர்க்கப்பட்ட (incremental) பட்டியலாக இருக்க வேண்டும். இந்த நோக்கத்திக்காக, தேர்தல் பதிவு அலுவலர், அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் அவ்வப்போது கால இடைவெளியில் கூட்டங்கள் நடத்தி, கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளின் பட்டியல்களை நேரடியாக அவர்களிடம் வழங்கி, பெற்று கொண்டதற்கான ஒப்புகைச் சீட்டை (acknowledgement) பெற வேண்டும்.

7. மேல்முறையீடுகள்:
1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ், 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 24(a) பிரிவின் படி, தேர்தல் பதிவு அலுவலரின் யாதொரு முடிவிற்கும் எதிராக, மாவட்ட நடுவரிடம் மேல்முறையீடு செய்யலாம். மேலும், முதல் மேல்முறையீட்டு அதிகாரி வழங்கிய முடிவிற்கு எதிராக, 24(b) ஆம் பிரிவின் கீழ், தலைமை தேர்தல் அதிகாரியிடம் இரண்டாம் மேல்முறையீடு செய்யலாம். இத்தகைய மேல்முறையீடுகள் 1960 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு விதிகளைச் சேர்ந்த, 27 ஆம் விதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. மேற்பார்வை மற்றும் சரிபார்ப்புகள்:

பின்வரும் மேற்பார்வை ஆய்வுகள் மற்றும் சரிபார்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவையாவன:

a. பொதுவாக தனது பொறுப்பில் 10 வாக்குச் சாவடி நிலை அலுவலர்களை கொண்டிருக்கும் ஒவ்வொரு வாக்குச் சாவடி நிலை அலுவலருக்கான மேற்பார்வையாளரும், தனக்கு கீழ் பணிபுரியும் ஒவ்வொரு வாக்குச் சாவடி நிலை அலுவலர்களின் சரிபார்ப்பு பணிகளில், 10% பணியைச் சரிபார்க்க வேண்டும்.

b. வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச் சாவடி நிலை அலுவலருக்கான மேற்பார்வையாளர்கள் மற்றும் வாக்குச் சாவடி நிலை அலுவலர், ஆகியோருடன் வழக்கமான / தொடர்ந்து கண்காணிப்பு கூட்டங்களை நடத்தி, மேற்கொள்ளப்படும் பணிகள் மேலோட்டமாக இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். தவறிழைத்த அலுவலர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, திருத்த நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

c. சிறப்பு தீவிர திருத்தத்தின் போது வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பார்வையாளர்களால் மேற்கொள்ளப்படும் கூர்ந்தாய்வுப் பணிகள்:

அலுவலகத்திலேயே ஆவணங்கள் அடிப்படையில் சரிபார்க்கும் முறையில், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் 250 படிவங்கள் (100 சேர்க்கைகள் + 100 நீக்கங்கள் +50 திருத்தங்கள்) அல்லது, ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 50 படிவங்கள் (20 சேர்க்கைகள் + 20 நீக்கங்கள் + 10 திருத்தங்கள்) சரிபார்க்கப்பட வேண்டும். இவ்வாறு சரிபார்க்கப்பட்ட படிவங்களில், குறைந்தளவு 50 படிவங்களுக்கு கள சரிபார்ப்பு கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

9. அரசியல் கட்சிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் வாக்காளர் பட்டியலை பகிர்ந்தளித்தல்:

a. தலைமை தேர்தல் அதிகாரி வாயிலாக மேற்கொள்ளப்படுபவை:

i. சிறப்பு தீவிர திருத்தத்தின் அட்டவணை அறிவிக்கப்பட்டவுடன், தலைமை தேர்தல் அதிகாரி, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனும் கூட்டங்கள் நடத்தி, சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சட்டம் மற்றும் நடைமுறைகள், முக்கிய அம்சங்களை அவர்களுக்கு தெரிவித்து, அவர்களின் ஒத்துழைப்பையும் கோர வேண்டும்.

ii. அத்தகைய அனைத்து கூட்டங்களுக்கு, உரிய கூட்ட குறிப்புகள், பங்கேற்பாளர்களின் கையொப்பங்களுடன் கூடிய வருகைப் பதிவுகள், ஆகியவை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

iii. தலைமை தேர்தல் அதிகாரி, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு வாக்குச் சாவடி நிலை முகவரை நியமிக்குமாறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை கேட்டுக்கொள்ள வேண்டும். அத்தகைய வாக்குச் சாவடி நிலை முகவர், திருத்தப்பணி (Revision Period) காலத்தில் வாக்குச் சாவடி நிலை அலுவலருடன் இணைந்து செயல்பட வேண்டும். அத்துடன், அரசியல் கட்சிகள் தங்களது வாக்குச் சாவடி நிலை முகவர்களின் பட்டியலை சம்பந்தப்பட்ட தேர்தல் பதிவு அலுவலர்களிடம் வழங்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

iv. தலைமை தேர்தல் அதிகாரி, இந்திய தேர்தல் ஆணைய இணையத் தளத்தின் வாயிலாக, திருத்தக் காலத்தில் பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் குறித்த அறிக்கையைப் பெற்றுக் கொண்டு அதனை வாரந்தோறும் பொதுமக்கள்/குடிமக்களின் தகவலுக்காக தனது இணையதளத்தில் வெளியிட வேண்டும்.

v. படிவம் 6, 6A, 7, 8 ஆகியவற்றில் பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் தினசரி கணினிமயமாக்கப்பட்டு, தலைமை தேர்தல் அதிகாரி இணையதளத்தில் அன்றாடம் பதிவேற்றப்பட வேண்டும்.

vi. வரைவு வாக்காளர் பட்டியல், இறுதி வாக்காளர் பட்டியல், மற்றும் கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் பட்டியல் ஆகியவை தலைமை தேர்தல் அதிகாரியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு, அவை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனும் பகிரப்பட வேண்டும்.

vii. வாக்காளர்கள் மற்றும் குடிமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு நாளுக்கு முன்னதாகவே, தலைமை தேர்தல் அதிகாரி, திருத்த கால அட்டவணைகளை, ஊடகங்கள், அரசியல் கட்சிகள், மற்றும் சமூக அமைப்புகள் / குடியிருப்பு நலச் சங்கங்கள் வழியாக பரவலாக அறிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(b) மாவட்ட தேர்தல் அலுவலர் வாயிலாக:

i. வாக்காளர்கள் மற்றும் குடிமக்களிடையே சென்றடையும் வகையில், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்னதாகவே, மாவட்ட தேர்தல் அதிகாரி, வாக்காளர் பட்டியல் திருத்த கால அட்டவணைகளை, ஊடகங்கள், அரசியல் கட்சிகள், மற்றும் சமூக அமைப்புகள் / குடியிருப்பு நலச் சங்கங்கள் வழியாக பரவலாக அறிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ii. மாவட்ட தேர்தல் அதிகாரி, அனைத்து தேசிய மற்றும் மாநில அளவிலான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் குறித்த கால இடைவேளையில் கூட்டங்களை நடத்தி, சிறப்பு தீவிர திருத்தத்தின் சட்டம் மற்றும் நடைமுறைகள் குறித்த முக்கிய அம்சங்களை விளக்கி, அவர்களின் ஒத்துழைப்பைப் கோர வேண்டும்.

(c) வாக்காளர் பதிவு அலுவலர் வாயிலாக:

i. வாக்காளர் பதிவு அலுவலர், வாரந்தோறும் அனைத்து அரசியல் கட்சிகளுடன் வரும் கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் பட்டியல் ஒன்றை பகிர வேண்டும்.

இதன் வாயிலாக அவர் இந்தப் பட்டியலை இந்திய தேர்தல் ஆணைய இணையத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்து பெற முடியும்.

ii. வரைவு மற்றும் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீட்டிற்குப் பின்னர் வாக்காளர் பட்டியலின் ஒவ்வொரு தனிப் பாகத்தின் இரண்டு நகல்களை (1 வன் நகல் மற்றும் 1 மென் நகல்) அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொரு அரசியல் கட்சிக்கு தேர்தல் பதிவு அலுவலர் இலவசமாக வழங்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக வழங்கப்படும் வாக்காளர் பட்டியலின் மென்நகலில் வாக்காளர்களின் புகைப்படங்கள் இடம்பெறாது.

(d) வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாயிலாக:

i. வீடுதோறும் சென்று கணக்கெடுப்பு மேற்கொள்ள தொடங்குவதற்கு முன்னர், வாக்குச் சாவடி நிலை அலுவலர், வாக்குச்சாவடி முகவர்களுடன் ஒரு கூட்டத்தை நடத்தி, சிறப்பு தீவிர திருத்த அட்டவணை மற்றும் செயல்முறைகள் குறித்து விளக்க வேண்டும்.

ii. வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள், மாநிலத்தின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச் சாவடி நிலை முகவர்களுடன் சேர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்து, மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அடையாளம் காண வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியால் ஒருமுறை நியமிக்கப்பட்ட ஒரு வாக்குச் சாவடி முகவர், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியினால் அவர்களின் நியமனம் ரத்து செய்யப்படும் வரையில் அந்தச் வாக்குச் சாவடிக்கான முகவராகவே தொடருவார் எனக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

iii. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளை அதிகரிக்கும் பொருட்டு, தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச் சாவடி முகவர்களை ஒரு வாக்குச் சாவடி முகவர், வரைவு வெளியீட்டுக்கு முன்னர் நாள் ஒன்றுக்கு 50 படிவங்களுக்கு அதிகமாக மற்றும் வரைவு வெளியீட்டிற்குப் பிறகு ஒரு நாளைக்கு 10 படிவங்களுக்கு அதிகமாகவும் வாக்குச் சாவடி நிலை அலுவலருக்கு அளிக்கக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு மொத்தமாக விண்ணப்பங்களை அளிக்க அனுமதித்துள்ளது.

iv. ஒவ்வொரு வாக்குச் சாவடி முகவரும், அந்த விண்ணப்ப படிவங்களில் உள்ள விவரங்கள் சரிபார்க்கப்பட்டது, அவை சரியானவை என்று மனநிறைவடைந்துள்ளதாகவும் ஒரு உறுதிமொழிப் படிவத்தை இணைத்தளிக்க வேண்டும்.

10. சிறப்பு தீவிர திருத்த காலத்தில் செய்தி குறிப்பு / விளம்பர அட்டவணை:

(a) சிறப்பு தீவிர திருத்த அட்டவணை அறிவிப்பு வெளியிடுதல்:

i. **செய்தி குறிப்பு**: வீடுதோறும் சென்று கணக்கெடுத்தல், சீரமைத்தல் (Rationalization) போன்ற முன்திருத்த நடவடிக்கைகளையும் அரசியல் கட்சிகளுடன் நடத்தப்படவுள்ள கூட்டங்கள் குறித்த கால அட்டவணை விவரங்களையும் விளக்கி செய்தி குறிப்பு ஒன்றை தலைமை தேர்தல் அதிகாரி வெளியிட வேண்டும். மாவட்ட தேர்தல் அலுவலர், தலைமை தேர்தல் அதிகாரியின் செய்தி குறிப்பை அதன் சமூக ஊடகப் பக்கங்களில் வெளியிட வேண்டும்.

ii. **விளம்பரம்**: தலைமைத் தேர்தல் அதிகாரி அதிகளவில் பயன்பாட்டிலுள்ள செய்தித்தாள்களில், கோரிக்கைகளையும் மறுப்புரைகளையும் தாக்கல் செய்யுமாறு பொது மக்களுக்கான கோரிக்கையுடன் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த அட்டவணையையும் வெளியிட வேண்டும்.

iii. **கடிதம்:** தலைமைத் தேர்தல் அதிகாரி / மாவட்டத் தேர்தல் அலுவலர் / வாக்காளர் பதிவு அலுவலர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த அட்டவணையையும் சிறப்பு தீவிர

திருத்த வழிகாட்டுதல்களையும் தெரிவித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு கடிதம் அனுப்ப வேண்டும்.

b. வாக்குச்சாவடி சீரமைப்பு:

i. **செய்திக்குறிப்பு**: மாவட்டத் தேர்தல் அலுவலர் வாக்குச்சாவடி வரைவுப் பட்டியல் குறித்து அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசிக்கும் கூட்டங்களின் புகைப்படங்களுடன் கூடிய செய்திக் குறிப்பை வெளியிட வேண்டும். இறுதி வாக்குச்சாவடி பட்டியலுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் ஏற்பளித்த பின்னர், தலைமைத் தேர்தல் அதிகாரி ஒருங்கிணைந்த செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட வேண்டும்.

c. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு

i. செய்திக் குறிப்பு: தலைமைத் தேர்தல் அதிகாரி / மாவட்டத் தேர்தல் அலுவலர்கள், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாளன்று, வாக்காளர்களின் விவரங்கள், கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைக் கால அளவு குறித்த விவரங்களுடன், வாராந்திர அடிப்படையில் கோரிக்கைகள் மற்றும் மறுப்புரை பட்டியல்களைப் பகிர்ந்து, மேல்முறையீடு வழிமுறை குறித்த தகவல்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களின் விவரங்களுடன் தனித்தனி செய்திக் குறிப்புகளை வெளியிட வேண்டும். அரசியல் கட்சிகளின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் வரைவு வாக்காளர் பட்டியலின் நகலை அளிக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களும் செய்திக் குறிப்பில் இடம்பெற வேண்டும்.

ii. **விளம்பரம்:** பொதுமக்கள் வரைவு வாக்காளர் பட்டியல் தொடர்பான தங்கள் கோரிக்கைகளையும் மறுப்புரைகளையும் தாக்கல் செய்யுமாறு தலைமைத் தேர்தல் அதிகாரி கேட்டுக்கொள்ள வேண்டும்.

d. கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளுக்கான காலம்

i. **செய்திக் குறிப்பு**: ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் அலுவலரும் வாராந்திர கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளின் பட்டியலை அரசியல் கட்சியினரிடம் வாக்காளர் பதிவு அலுவலர் வழங்கும் புகைப்படங்களைப் பகிரும்பொழுது. ஒரு செய்திக் குறிப்பை வெளியிடுவார்.

e. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு

i. **செய்திக்குறிப்பு:** தலைமைத் தேர்தல் அதிகாரி / மாவட்டத் தேர்தல் அலுவலர்கள், வாக்காளர்களின் விவரங்களுடன் கூடிய இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாளன்று செய்திக் குறிப்பு ஒன்றையும், வாக்காளர் பதிவு அலுவலர் இறுதி வாக்காளர் பட்டியலை அரசியல் கட்சியினரிடம் அளிக்கும் புகைப்படங்களையும் வெளியிடுவார்கள். இச்செய்திக்குறிப்பு பொதுமக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் மேல்முறையீட்டுச் செயல்முறை குறித்தும் தெரிவிக்கும்.

**ii. விளம்பரம்**: தலைமைத் தேர்தல் அதிகாரி வாக்காளர்களின் விவரங்கள் குறித்த இறுதி வெளியீடு மற்றும் சுருக்கம் குறித்தும் மேல்முறையீட்டு செயல்முறை குறித்தும் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**11. இறுதி வெளியீடு காலத்தில் வாக்காளர் பட்டியலைத் தயாரித்தல்.**

a. இறுதி வாக்காளர் பட்டியல் நாளதுவரையாக்கப்பட்ட ஒரே பட்டியலாக (வரைவு வாக்காளர் பட்டியல் மற்றும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது தயாரிக்கப்பட்ட துணை பட்டியல்கள்) அமைந்திருப்பதை வாக்காளர் பதிவு அலுவலர் உறுதி செய்வார். அப்பட்டியலில், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த காலத்தின்போது சேர்க்கப்பட்ட அனைத்து பதிவுகளும், வரைவு வாக்காளர்

பட்டியலின் இறுதி பதிவிற்குப் பின்னர் தொடர்ச்சியான வரிசை எண்ணில் இடம்பெறும் மற்றும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது மேற்கொள்ளப்பட்ட அனைத்து திருத்தங்களும் நீக்கங்களும் நாளதுவரையாக்கப்பட்டவாக்காளர் பட்டியலில், திருத்தம் செய்யப்பட்ட அல்லது நீக்கம் செய்யப்பட்ட அத்தகைய பதிவுகளின் வரிசை எண்ணிற்கு நிகராக குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

b. இந்த இறுதி வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். மேலும், இதனை வலைதளத்திலும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

c. புதிதாக சேர்க்கப்பட்ட, நீக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட பெயர்களின் பட்டியல் தனியாக அச்சிடப்பட்டு அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட மாட்டாது. வாக்காளர் பதிவு அலுவலர்கள் இந்த பட்டியல்களை இந்தியத் தேர்தல் ஆணைய வலைதளத்திலிருந்து (ECINet) பெற்றுக்கொண்டாலும் கூட, அவர்களின் எதிர்கால குறிப்பிற்காக மட்டுமே அவற்றை வைத்துக் கொள்வர்.

d. வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர், தாமாக முன்வந்து விசாரணை செய்ததன் அடிப்படையில் வாக்காளர் தகுதியை ஆய்வு செய்து, வாக்காளர் தரப்பு விளக்கத்தை அளிப்பதற்கான போதிய வாய்ப்பளிக்கப்பட்ட பின்னர், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கக் கருதப்பட்டுள்ள வாக்காளர், வாக்காளராக பதிவு செய்யப்படுவதற்கு தகுதியற்றவர் என கண்டறிந்தால், அத்தகைய பெயர்கள் இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதை வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் உறுதி செய்ய வேண்டும். மாவட்ட நடுவரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு அத்தகைய வாக்காளர்களுக்கு உரிமையுண்டு.

12. தேர்தல்களின்போது வாக்காளர் பட்டியலை தயாரித்தல்

a. தேர்தல்களின்போது, வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான இறுதி நாளன்று வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும்போது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு அளிக்கப்படுவதற்கும் குறியீடு செய்யப்பட்ட நகலை / பணிக்கான நகலைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டியவை வருமாறு:

i. வாக்காளர் பட்டியலில் ஒரே பதிவிற்கு மறுவரிசை எண் அளிக்கப்படாமல் நாளதுவரையாக்கப்பட்ட ஒரே பட்டியலாக வாக்காளர் பட்டியல் அமைந்திருப்பதை வாக்காளர் பதிவு அலுவலர் உறுதி செய்வார். பெயர் நீக்கம் செய்யப்பட்ட பதிவுகள் நீக்கப்பட மாட்டாது.

ii. வாக்காளர் பட்டியல் இறுதி வெளியீட்டு நாளிலிருந்து வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான (தேர்தலின்போது) இறுதி நாள் வரையில், தொடர் நாளதுவரையாக்கலின்போது சேர்க்கப்பட்ட அனைத்து பதிவுகளும், இறுதி வாக்காளர் பட்டியலின் கடைசி பதிவிற்கான வரிசை எண்ணிற்கு அடுத்த எண்ணிலிருந்து தொடங்கி தொடர்ச்சியாக வரிசை எண் அளிக்கப்பட்ட காலமுறை வரிசையில் (chronological order) வரிசைப்படுத்தப்படும். நீக்கம் மற்றும் திருத்தம் செய்யப்பட்ட அனைத்து பதிவுகளும் ஆணையத்தின் தற்போதைய அறிவுறுத்தல்களின்படி இறுதி வாக்காளர் பட்டியலில் குறிக்கப்படும்.

b. தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து பத்து நாட்களுக்குப் பின்னர், பெயர்களை நீக்குவதற்கும் வாக்காளர்களின் விவரங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கும் முழுமையாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பெறப்பட்ட படிவம்-7 மற்றும் படிவம்-8 (இடமாற்றம் நீங்கலாக) அனைத்தும் தேர்தல் நிறைவடைந்த பின்னர் ஒருவகைசெய்யப்பட (dispose) வேண்டும். முகவரி மாற்றம் செய்ததற்காக படிவம்-8-இல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த நேர்வில், வேட்பு

மனுக்களை தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் வரையில் தொடர்ந்து பெயர்கள் சேர்க்கப்பட வேண்டும். அதே வேளையில், தேர்தல் நிறைவடைந்த பின்னர், வாக்காளர் பதிவு அலுவலர் பழைய முகவரியில் உள்ள அந்த பதிவை நீக்க வேண்டும். முன்னர் பெயர் பதிவு செய்யப்பட்ட இடத்திலுள்ள முகவரியில் இல்லாதவர்கள், முகவரியை மாற்றியவர்கள் மற்றும் இறந்தவர்களின் (ASD) பெயர் பட்டியலில் அந்த பெயர்கள் இருக்கும்.

***

**பிற்சேர்க்கை C**

**கணக்கீட்டுப் படிவம்**

வாக்காளரின் பெயர், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை, முகவரி (முன்னரே அச்சிடப்பட்டுள்ளது)

வரிசை எண், பகுதி எண். மற்றும் பெயர் , சட்டமன்ற தொகுதி / நாடாளுமன்ற தொகுதியின் பெயர், மாநிலம் (முன்னரே அச்சிடப்பட்டுள்ளது)

| | |
|---|---|
| பழைய புகைப்படம் (முன்னரே அச்சிடப்பட்டுள்ளது) | தற்போதைய புகைப்படத்தை ஒட்டவும் |

| | | |
|---|---|---|
| பிறந்த நாள் | ஆதார் எண் ( விரும்பினால் அளிக்கவும்) | அலைபேசி எண் |

| | |
|---|---|
| தந்தை / சட்டப்படியான பாதுகாவலர் பெயர் | வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் (இருப்பின்) |

| | |
|---|---|
| தாயின் பெயர் | வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் (இருப்பின்) |

| | |
|---|---|
| துணைவரின் பெயர் (பொருந்துமெனில்) | வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் (இருப்பின்) |

**உறுதிமொழி**

நான் நன்கு அறிந்த வரையிலும் நம்புகிற வரையிலும் பின்வருவனவற்றிற்கு இதனால் நான் உறுதியளிக்கிறேன் –

(i) எனக்கு 18 வயது நிறைவடைந்துவிட்டது, நான் மேற்சொன்ன முகவரியில் வழக்கமாக வசித்து வரும் ஓர் இந்தியக் குடிமகன். (ஏதேனும் ஒன்றை ✓ குறியிடவும்)

- நான் 01.07.1987ஆம் நாளுக்கு முன்னர் இந்தியாவில் பிறந்தேன்.
    - பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து, தனக்கான யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.

- நான் 01.07.1987 மற்றும் 02.12.2004 ஆம் நாட்களுக்கிடையே இந்தியாவில் பிறந்தேன்.
    - பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து, தனக்கான யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
    - பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தனது தந்தை அல்லது தாயாருக்கான யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
- நான் 02.12.2004–க்குப் பின்னர் இந்தியாவில் பிறந்தேன்.
    - பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து, தனக்கான யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
    - பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தனது தந்தையாருக்காக யாதொரு ஆன்றாவணத்தை அளிக்கவும்.
    - பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தனது தாயாருக்காக யாதொரு ஆவணத்தை அளிக்கவும் .
    - பெற்றோரில் ஒருவர் இந்தியர் இல்லை என்றால், நீங்கள் பிறந்த நேரத்தில் அவரது செல்லத்தக்க கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) மற்றும் புகவுச்சீட்டின் (விசா) நகலை வழங்கவும்.
- நான் இந்தியாவிற்கு வெளியே பிறந்தவன் (வெளிநாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தால் வழங்கப்பட்ட பிறப்புப் பதிவுச் சான்றை இணைக்கவும்)
    - பதிவுக் குடியுரிமை/இயல்பாகக் குடியுரிமை வழங்குதல் வாயிலாக நான் இந்தியக் குடியுரிமை பெற்றுள்ளேன் (குடியுரிமைப் பதிவுச் சான்றிதழை இணைக்கவும்)

(ii) நான் ஏனைய யாதொரு நாட்டின் குடியுரிமையையும் பெறவில்லை.

(iii) நான் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கிறேன், மேலும் ஏனைய யாதொரு சட்டமன்றத் தொகுதி / நாடாளுமன்றத் தொகுதியிலும் எனது பெயர் சேர்க்கப்படவில்லை.

(iv) இவ்விண்ணப்பம் தொடர்பாக, தவறாகவும், எனக்குத் தெரிந்த வரையில் அல்லது நம்புகிற வரையில் தவறாகவும் அல்லது சரியென எனக்கு நம்பிக்கையளிக்காத வகையிலும், மேற்சொன்ன அறிக்கையை அல்லது உறுதிமொழியை அளிப்பது, 1950–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (43/1950) 31–ஆம் பிரிவின் கீழ் ஓராண்டு வரை நீட்டிக்கத்தக்க சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கத்தக்க குற்றமென்பதை நான் நன்கறிவேன்.

நாள்:---------- இடம்: ------- கையொப்பம் / இடது கை பெருவிரல் ரேகை

**உறுதிமொழிக்கு ஆதாரமாக அளிக்கப்பட வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிட்டு காட்டுகிற (முழுமையானதல்ல) பட்டியல். (போதுமான ஆவணமாகக் கருதப்படும், 01.01.2003–ஐ தகுதி நாளாகக் கொண்ட பீகார் வாக்காளர் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டவை பயன்படுத்தப்பட்டிருந்தாலன்றி, விண்ணப்பதாரர், தந்தை மற்றும் தாயார் குறித்த நேர்வில் மேலே ஆவணங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின், சுய சான்றளிக்கப்பட்ட அத்தகைய தனித்தனி ஆவணங்கள் அளிக்கப்பட வேண்டும்):**

1. யாதொரு மத்திய / மாநில அரசு / பொதுத்துறை நிறுவனத்தின் நிரந்தப் பணியாளருக்கு / ஓய்வூதியதாரருக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது ஓய்வூதிய வழங்கல் ஆணை (PPO)

2. 01.07.1987 க்கு முன்னர் இந்தியாவில் உள்ள யாதொரு அரசு / உள்ளூர் அதிகார அமைப்புகள் / வங்கிகள் / அஞ்சல் அலுவலகம் / இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் / பொதுத்துறை நிறுவனத்தால் வழங்கப்பட்ட யாதொரு அடையாள அட்டை / சான்றிதழ் / ஆவணம்

3. தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு வாயிலாக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்

4. கடவுச்சீட்டு

5. அங்கீகரிக்கப்பட்ட வாரியங்கள் / பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட மெட்ரிகுலேஷன் / கல்விச் சான்றிதழ்

6. தகுதிவாய்ந்த மாநில அதிகார அமைப்பு வாயிலாக வழங்கப்பட்ட நிரந்தர வசிப்பிடச் சான்றிதழ்

7. வன உரிமைச் சான்றிதழ்

8. தகுதிவாய்ந்த அதிகாரி வாயிலாக வழங்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) / பட்டியலினத்தவர் / பழங்குடியினர் அல்லது யாதொரு சாதிச் சான்றிதழ்

9. தேசிய குடிமக்கள் பதிவேடு (பொருந்தும் இடங்களிலெல்லாம்)

10. மாநில / உள்ளூர் அதிகார அமைப்புகளால் உருவாக்கப்பட்ட குடும்பப் பதிவேடு

11. அரசால் வழங்கப்பட்ட யாதொரு நிலம் / குடியிருப்பு ஒதுக்கீட்டுச் சான்றிதழ்

**பிற்சேர்க்கை D**

## உறுதிமொழிப் படிவம்

(பிற மாநிலங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் புதிய வாக்காளராக பதிவு செய்வதற்கு/ படிவம் 6/8 உடன் அளிக்கப்பட வேண்டும்)

நான் நன்கு அறிந்த வரையிலும் நம்புகிற வரையிலும் பின்வருவனவற்றிற்கு இதனால் நான் உறுதியளிக்கிறேன் –

(i) எனக்கு 18 வயது நிறைவடைந்துவிட்டது, நான் மேற்சொன்ன முகவரியில் வழக்கமாக வசித்து வரும் ஓர் இந்தியக் குடிமகன். (ஏதேனும் ஒன்றை ✓ குறியிடவும்)

- நான் 01.07.1987ஆம் நாளுக்கு முன்னர் இந்தியாவில் பிறந்தேன்.
    - பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து, தனக்கான யாதொரு சட்டப்படிக்கான சான்றாவணத்தை அளிக்கவும்.
- நான் 01.07.1987 மற்றும் 02.12.2004 ஆம் நாட்களுக்கிடையே இந்தியாவில் பிறந்தேன்.
    - ☐ பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து, தனக்கான யாதொரு சட்டப்படிக்கான சான்றாவணத்தை அளிக்கவும்.
    - ☐ பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தனது தந்தை அல்லது தாயாருக்கான யாதொரு சட்டப்படிக்கான சான்றாவணத்தை அளிக்கவும்.
- நான் 02.12.2004–க்குப் பின்னர் இந்தியாவில் பிறந்தேன்.
    - ☐ பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து, தனக்கான யாதொரு சட்டப்படிக்கான சான்றாவணத்தை அளிக்கவும்.
    - ☐ ☐பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தனது தந்தையாருக்காக யாதொரு சட்டப்படிக்கான சான்றாவணத்தை அளிக்கவும்.
    - ☐ பிறந்த நாள் மற்றும்/அல்லது பிறந்த இடத்தை மெய்ப்பிப்பதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தனது தாயாருக்காக யாதொரு சட்டப்படிக்கான சான்றாவணத்தை அளிக்கவும் .
    - பெற்றோரில் ஒருவர் இந்தியர் இல்லை என்றால், நீங்கள் பிறந்த நேரத்தில் அவரது செல்லத்தக்க கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) மற்றும் புகவுச்சீட்டின் (விசா) நகலை வழங்கவும்.
- நான் இந்தியாவிற்கு வெளியே பிறந்தவன் (வெளிநாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தால் வழங்கப்பட்ட பிறப்புப் பதிவுச் சான்றை இணைக்கவும்)
- பதிவுக் குடியுரிமை/இயல்பாகக் குடியுரிமை வழங்குதல் வாயிலாக நான் இந்தியக் குடியுரிமை பெற்றுள்ளேன் (குடியுரிமைப் பதிவுச் சான்றிதழை இணைக்கவும்)

(ii) நான் ஏனைய யாதொரு நாட்டின் குடியுரிமையையும் பெறவில்லை.

(iii) நான் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கிறேன், மேலும் ஏனைய யாதொரு சட்டமன்றத் தொகுதி / நாடாளுமன்றத் தொகுதியிலும் எனது பெயர் சேர்க்கப்படவில்லை.

(iv) இவ்விண்ணப்பம் தொடர்பாக, தவறாகவும், எனக்குத் தெரிந்த வரையில் அல்லது நம்புகிற வரையில் தவறாகவும் அல்லது சரியென எனக்கு நம்பிக்கையளிக்காத வகையிலும், மேற்சொன்ன அறிக்கையை அல்லது உறுதிமொழியை அளிப்பது, 1950–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (43/1950) 31–ஆம் பிரிவின் கீழ் ஓராண்டு வரை நீட்டிக்கத்தக்க சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கத்தக்க குற்றமென்பதை நான் நன்கறிவேன்..

நாள்:--------இடம்:-------- கையொப்பம்/ இடது கை பெருவிரல் ரேகை

**உறுதிமொழிக்கு ஆதாரமாக அளிக்கப்பட வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிட்டு காட்டுகிற (முழுமையானதல்ல) பட்டியல். (போதுமான ஆவணமாகக் கருதப்படும், 01.01.2003–ஐ தகுதி நாளாகக் கொண்ட பீகார் வாக்காளர் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டவை பயன்படுத்தப்பட்டிருந்தாலன்றி, விண்ணப்பதாரர், தந்தை மற்றும் தாயார் குறித்த நேர்வில் மேலே ஆவணங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின், சுய சான்றளிக்கப்பட்ட அத்தகைய தனித்தனி ஆவணங்கள் அளிக்கப்பட வேண்டும்):**

1. யாதொரு மத்திய / மாநில அரசு / பொதுத்துறை நிறுவனத்தின் நிரந்தப் பணியாளருக்கு / ஓய்வூதியதாரருக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது ஓய்வூதிய வழங்கல் ஆணை (PPO)

2. 01.07.1987 க்கு முன்னர் இந்தியாவில் உள்ள யாதொரு அரசு / உள்ளூர் அதிகார அமைப்புகள் / வங்கிகள் / அஞ்சல் அலுவலகம் / இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் / பொதுத்துறை நிறுவனத்தால் வழங்கப்பட்ட யாதொரு அடையாள அட்டை / சான்றிதழ் / ஆவணம்

3. தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு வாயிலாக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்

4. கடவுச்சீட்டு

5. அங்கீகரிக்கப்பட்ட வாரியங்கள் / பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட மெட்ரிகுலேஷன் / கல்விச் சான்றிதழ்

6. தகுதிவாய்ந்த மாநில அதிகார அமைப்பு வாயிலாக வழங்கப்பட்ட நிரந்தர வசிப்பிடச் சான்றிதழ்

7. வன உரிமைச் சான்றிதழ்

8. தகுதிவாய்ந்த அதிகாரி வாயிலாக வழங்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) / பட்டியலினத்தவர் / பழங்குடியினர் அல்லது யாதொரு சாதிச் சான்றிதழ்

9. தேசிய குடிமக்கள் பதிவேடு (பொருந்தும் இடங்களில்)

10. மாநில / உள்ளூர் அதிகார அமைப்புகளால் உருவாக்கப்பட்ட குடும்பப் பதிவேடு

11. அரசால் வழங்கப்பட்ட யாதொரு நிலம் அல்லது குடியிருப்பு ஒதுக்கீட்டுச் சான்றிதழ்

****

**இந்திய தேர்தல் ஆணையம்**
நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புது தில்லி–110001

எண்.23/2025–ERS/தொகுதி.II **நாள்:** 09.09.2025

பெறுநர்,

தலைமை தேர்தல் அதிகாரி,

பீகார்.

**பொருள்:** பீகார் சிறப்பு தீவிர வாக்காளர்ப் பட்டியல் திருத்தத்தின் போது , ஆதார் அடையாள அட்டையை அடையாளச் சான்றாக ஏற்றுக்கொள்வது –தொடர்பாக

**பார்வை :** நீதிப்பேராணை மனு ( சிவில்) 640/2025– இல் 08.09.2025ஆம் நாளிட்ட மாண்பமை உச்ச நீதிமன்ற ஆணை/உத்தரவு .

ஐயா,

1. மக்களாட்சி"சீர்திருத்தங்களுக்கான சங்கம் எதிர் இந்திய தேர்தல் ஆணையம் [சிவில் (W) எண். 640/2025]" வழக்கின் மனு 08.09.2025 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதையும் அதில் மாண்பமை உச்ச நீதிமன்றம் பின்வருமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது என்பதையும் தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன்,:

"இதுகாறும், ஆதார ஆவணங்களைப் பொறுத்தளவில், இங்கு தற்காலிக பிரச்சனையின் தீர்வாக, ஆதார் அட்டையின் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மை மற்றும் அதன் நிலை ஆகியவை தொடர்பாக மேற்கொண்டும் தெளிவுபடுத்தப்பட வேண்டியதாக உள்ளது. தொடர்புடையதாகும். 2016ஆம் ஆண்டு ஆதார் (நிதி மற்றும் ஏனைய மானியங்கள், சலுகைகள் மற்றும் சேவைகளை இலக்காகக் கொண்டு வழங்குதல்) சட்டத்தின் கீழ் ஆதார் அட்டைக்கு ஒதுக்கிடப்பட்டுள்ள சட்டப்படியான நிலையின் படி, அது குடியுரிமைக்கான சான்றாகாது. எனவே, அது குடியுரிமைக்கான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதில் யாதொரு பிரச்சனையும் இல்லை. இருப்பினும், 1950ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 23(4) ஆம் பிரிவைக் கருத்தில் கொண்டு, ஆதார் அட்டை என்பது ஒரு நபரின் அடையாளத்தை உறுதி செய்வதற்காக பட்டியலிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றாகும். அதன்படி, பீகார் மாநிலத்தின் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்ப்பதற்கு அல்லது நீக்குவதற்கு ஆதார் அட்டையை அடையாளச் சான்றாக ஏற்றுக்கொள்ளுமாறு இந்திய தேர்தல் ஆணையத்தையும் அதன் அதிகாரிகளையும் நாங்கள் அறிவுறுத்துகிறோம். இந்த நோக்கத்திற்காக, அதிகாரிகளால் ஆதார் அட்டை, 12வது ஆவணமாகக் கருதப்படும். இருப்பினும், சான்றாவணங்களைக் கோருவதன் வாயிலாக, ஏனைய பட்டியலிடப்பட்ட ஆவணங்களைப் போலவே, ஆதார் அட்டையின் நம்பகத்தன்மையையும் உண்மைத்தன்மையையும் சரிபார்ப்பதற்கு அதிகாரிகளுக்கு உரிமை உண்டு என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் நாளை அதாவது 09.09.2025ஆம் நாளுக்குள் இது தொடர்பான வழிமுறைகளை வெளியிட வேண்டும்."

2. இது தொடர்பாக, 14.08.2025 மற்றும் 23.08.2025 ஆம் நாளிட்ட அதே எண் கொண்ட கடிதத்தின்படி,ஆணையம் ஏற்கெனவே, , 14.08.2025 மற்றும் 22.09.2025 ஆம் நாளிட்ட மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் முந்தைய வழிகாட்டுதல்களை ஆதார் அட்டையின்

நகலுடன் கூடிய விண்ணப்பங்களை கண்டிப்பாக ஏற்றுக்கொள்வதற்காகவும் ஆணையம் ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

3. மேலும், 08.09.2025ஆம் நாளிட்ட மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து, உடனடியாக பின்பற்றுவதற்கு ஏதுவாக பின்வரும் வழிமுறைகள் வெளியிடப்படுகின்றன:

a. 24.06.2025 ஆம் நாளிட்ட உத்தரவின் சிறப்பு தீவிர வாக்காளர்ப் பட்டியல் திருத்தத்தில் (SIR ) பிற்சேர்க்கை C மற்றும் பிற்சேர்க்கை D இல் பட்டியலிடப்பட்டுள்ள 11 ஆவணங்களுடன் கூடுதலாக, ஆதார் அட்டை 12வது ஆவணமாகக் கருதப்படும்.

b. 2026 ஆம் ஆண்டு ஆதார் (நிதி மற்றும் ஏனைய மானியங்கள், சலுகைகள் மற்றும் சேவைகளை வழங்குதல்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் படி, ஆதார் அட்டையை குடியுரிமைக்கான சான்றாக அல்லாமல் அடையாளச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பயன்படுத்த வேண்டும்.

c. 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 23(4) பிரிவின் கீழ், ஆதார் அட்டை ஏற்கெனவே ஒரு நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான பட்டியலிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றாக உள்ளது.

4. மேற்சொன்னவற்றைக் கருத்தில் கொண்டு, இதை அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/ வாக்காளர் பட்டியல் பதிவு அலுவலர்கள் /உதவி வாக்காளர் பட்டியல் பதிவு அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு நீங்கள் பணிக்கப்பட்டுள்ளீர்கள். இந்த உத்தரவுக்கு இணங்காதமை அல்லது ஆதார் எண்ணை ஏற்க மறுத்தல் போன்ற யாதொரு நிகழ்வின் மீதும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் .

தங்கள் உண்மையுள்ள,<br>
ஒம்/–<br>
பவன் திவான்<br>
செயலாளர்<br>
இந்திய தேர்தல் ஆணையம்

<u>பிற்சேர்க்கை – III</u>

**கணக்கீட்டுப் படிவம்**

**வாக்குச்சாவடி நிலை அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய எண் (முன்னதாகவே அச்சிடப்பட்டது)**

| வாக்காளரின் பெயர், புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை, முகவரி (முன்னதாகவே அச்சிடப்பட்டது) | வரிசை எண், பாகம் எண் & பெயர், சட்டமன்றத் தொகுதியின் / நாடாளுமன்றத் தொகுதியின் பெயர், மாநிலம் (முன்னதாகவே அச்சிடப்பட்டது) | QR குறியீடு | பழைய புகைப்படம் (முன்னதாக அச்சிடப்பட்டது) | தற்போதைய புகைப்படத்தை ஒட்டவும் |
|---|---|---|---|---|

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிறந்த நாள் (நாள் / மாதம் / ஆண்டு) | | | | | | | | |
| ஆதார் எண் (விரும்பினால் அளிக்கலாம்) | | | | | | | | |
| அலைபேசி எண் | | | | | | | | |
| தந்தையின் / பாதுகாவலரின் பெயர் | | | | | | | | |
| தந்தையின் / பாதுகாவலரின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) | | | | | | | | |
| தாயாரின் பெயர் | | | | | | | | |
| தாயாரின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) | | | | | | | | |
| வாழ்க்கைத் துணையின் பெயர் (பொருந்துமாயின்) | | | | | | | | |
| வாழ்க்கைத் துணையின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) | | | | | | | | |

| **இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தீவிர திருத்த வாக்காளர் பட்டியலில் உள்ளவாறு வாக்காளரின் விவரங்கள்** | | | **இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தீவிர திருத்தத்தின்படி முந்தைய நெடும்பத்தியில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உறவினரின் விவரங்கள்** | | |
|---|---|---|---|---|---|
| வாக்காளரின் பெயர்: | | | பெயர்: | | |
| புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) | | | புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) | | |
| உறவினரின் பெயர்: | | | உறவினரின் பெயர்: | | |
| உறவுமுறை: | | | உறவுமுறை: | | |
| மாவட்டம்: | | | மாவட்டம்: | | |
| மாநிலம்: | | | மாநிலம்: | | |
| சட்டமன்றத் தொகுதியின் பெயர்: | | | சட்டமன்றத் தொகுதியின் பெயர்: | | |
| சட்டமன்றத் தொகுதியின் எண் | பாகம் எண்: | தொடர் எண்: | சட்டமன்றத் தொகுதியின் எண் | பாகம் எண்: | தொடர் எண்: |
| | | | | | |

(i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளராகிய நான்/ எனது குடும்ப உறுப்பினர் வேறு யாதொரு நாட்டின் குடியுரிமையையும் பெற்றிருக்கவில்லை.

(ii) நான் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்காக விண்ணப்பிக்கின்றேன், மேலும் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நான் / எனது குடும்ப உறுப்பினர் பெயர்கள் வேறு யாதொரு சட்டமன்றத் தொகுதியிலும் / நாடாளுமன்றத் தொகுதியிலும் சேர்க்கப்படவில்லை.

(iii) இவ்விண்ணப்பம் தொடர்பாக தவறானதாகவும், எனக்குத் தெரிந்த வரையில் அல்லது நம்புகிற வரையில் தவறாக அல்லது உண்மையென எனக்கு நம்பிக்கையளிக்காத வகையில் மேற்சொன்ன அறிக்கை அல்லது உறுதிமொழியை அளிப்பது, 1950–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (43/1950) 31–ஆம் பிரிவின் கீழ் ஓராண்டு வரை நீட்டிக்கத்தக்க சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கத்தக்க குற்றமென்பதை நான் நன்கறிவேன்.

வாக்காளர் கையொப்பம்/ இடது கைப் பெருவிரல் ரேகை

வாக்காளரின் அல்லது வாக்களிக்கும் வயதை எய்திய யாதொரு குடும்ப உறுப்பினரின் (உறவுமுறையைக் குறிப்பிடவும்), நாள் விவரத்துடன்

**வாக்குச்சாவடி நிலை அலுவலரின் உறுதிமொழி:** முந்தைய மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தீவிர திருத்த வாக்காளர் பட்டியலிலிருந்து / பட்டியல்களிலிருந்து மேற்சொன்ன விவரங்களை நான் சரிபார்த்துள்ளேன்.

வாக்குச்சாவடி நிலை அலுவலரின் கையொப்பம்

**கணக்கீட்டுப் படிவத்திற்கான தகவல் தாள்**

கணக்கீட்டுப் படிவத்தில் விவரங்களை அளிப்பதற்காக, https://voters.eci.gov.in/ என்ற இணைய முகவரியில் முந்தைய சிறப்புத் தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல்களில் வாக்காளர்கள் தங்கள் பெயரையும், தொடர்புடைய உறவினரின் / உறவினர்களின் பெயரையும் சரிபார்க்கலாம். உதவி வேண்டி, தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை வாக்காளர்கள் தொடர்பு கொள்ளலாம். கணக்கெடுப்பு படிவத்தில் வழங்கப்பட்ட முந்தைய சிறப்புத் தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல்(கள்) விவரங்கள் கிடைக்கப்பெறாத அல்லது தரவுத்தளத்துடன் பொருந்தாத வாக்காளர்களுக்கு, வாக்காளர் பட்டியல் பதிவு அலுவலர் அறிவிப்பை அனுப்புவார். வாக்காளர் அறிவிப்பு கிடைத்ததும், பின்வரும் வகைப்பாடுகளின் அடிப்படையில் ஆவணங்களை அளிக்க வேண்டும்:

- 01.07.1987 ஆம் நாளுக்கு முன்னர் இந்தியாவில் பிறந்திருப்பின்,
  - வாக்காளரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
- 01.07.1987 மற்றும் 02.12.2004 ஆகிய நாட்களுக்கு இடையேயான காலக்கட்டத்தில் இந்தியாவில் பிறந்திருப்பின்,
  - வாக்காளரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
  - தந்தையின் அல்லது தாயாரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
- 02.12.2004 ஆம் நாளுக்குப் பின்னர் இந்தியாவில் பிறந்திருப்பின்,
  - வாக்காளரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
  - தந்தையின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
  - தாயாரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
  - பெற்றோரில் ஒருவர் இந்தியராக இல்லாவிடின், நீங்கள் பிறந்த நேரத்தில் அவருடைய செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) மற்றும் புகவுச்சீட்டின் (விசா) நகலை அளிக்கவும்.
- இந்தியாவிற்கு வெளியே பிறந்திருப்பின் (வெளிநாட்டிலுள்ள இந்திய தூதரகத்தால் வழங்கப்பட்ட பிறப்புப் பதிவுச் சான்றை இணைக்கவும்).
- பதிவுபெறுதல் / குடியுரிமை வழங்கல் வாயிலாக இந்திய குடியுரிமை பெற்றிருப்பின் (குடியுரிமைப் பதிவுச் சான்றிதழை இணைக்கவும்)

**குறிப்பாகத் தெரிவிக்கப்பட்ட (முழுமையானது அல்ல) ஆவணங்களின் பட்டியல் (மேலே குறிப்பிடப்பட்டிருப்பின் வாக்காளர், தந்தை மற்றும் தாயாருக்கு தனித்தனியாக சுய சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்பட வேண்டும்):**

1. யாதொரு மத்திய அரசின் / மாநில அரசின் / பொதுத்துறை நிறுவனத்தின் நிரந்தப் பணியாளருக்கு / ஓய்வூதியதாரருக்கு வழங்கப்பட்ட யாதொரு அடையாள அட்டை/ ஓய்வூதியம் வழங்கல் ஆணை (PPO)

2. 01.07.1987 – க்கு முன்னர் அரசு / உள்ளாட்சி அமைப்புகள் / வங்கிகள் / அஞ்சல் அலுவலகம் / இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் / பொதுத்துறை நிறுவனங்கள் இந்தியாவில் வழங்கிய யாதொரு அடையாள அட்டை / சான்றிதழ் / ஆவணம்

3. தகுதிவாய்ந்த அதிகார அமைப்பால் வாயிலாக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்

4. கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்)

5. அங்கீகரிக்கப்பட்ட வாரியங்களால் / பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட கல்விச் சான்றிதழ் / மெட்ரிகுலேஷன் சான்றிதழ்

6. தகுதிவாய்ந்த மாநில அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட நிரந்தர வசிப்பிடச் சான்றிதழ்

7 வன உரிமைச் சான்றிதழ்

8. தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட்ட இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பட்டியல் வகுப்பினர் / பட்டியல் பழங்குடியினர் அல்லது யாதொரு சாதிச் சான்றிதழ்

9. தேசிய குடிமக்கள் பதிவேடு (பொருந்தும் இடங்களில்)

10. மாநில / உள்ளூர் அதிகார அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட குடும்பப் பதிவேடு

11. அரசால் வழங்கப்பட்ட நிலம் / வீடு குடியிருப்பு ஒதுக்கீட்டுச் சான்றிதழ்

12. ஆதாரைப் பொறுத்தவரை, ஆணையத்தால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள் பொருந்தும் (காண்க: 09.09.2025 ஆம் நாளிட்ட 23/2025–ERS/தொகுதி.II (பிற்சேர்க்கை II எண் கடிதம்)

13. 01.07.2025 ஆம் நாளிட்ட பீகாரின் சிறப்புத் தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியலின் பகுதி நகல்.

**பிற்சேர்க்கை – IV**

**உறுதிமொழிப் படிவம்**

(புதிய வாக்காளராகப் பதிவு செய்வதற்கு / வெளி மாநிலத்திலிருந்து இடம் பெயர்ந்தவராக பதிவு செய்வதற்கு படிவம் 6/ படிவம் 8 உடன் அளிக்கப்பட வேண்டும்)

விண்ணப்பதாரரின் பெயர்:

அலைபேசி எண்:

முகவரி:

| | |
|---|---|
| தந்தையின் / பாதுகாவலரின் பெயர் | |
| தந்தையின் / பாதுகாவலரின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) | |
| தாயாரின் பெயர் | |
| தாயாரின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) | |
| வாழ்க்கைத் துணையின் பெயர் (பொருந்துமாயின்) | |
| வாழ்க்கைத் துணையின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்) | |

<table>
<tr><th colspan="3">இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தீவிர திருத்த வாக்காளர் பட்டியலில் உள்ளவாறு வாக்காளரின் விவரங்கள் (பொருந்துமாயின்)</th><th colspan="3">இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தீவிர திருத்தத்தின்படி முந்தைய நெடும்பத்தியில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உறவினரின் விவரங்கள்</th></tr>
<tr><td colspan="3">வாக்காளரின் பெயர்:</td><td colspan="3">பெயர்:</td></tr>
<tr><td colspan="3">புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்)</td><td colspan="3">புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை எண் (இருப்பின்)</td></tr>
<tr><td colspan="3">உறவினரின் பெயர்:</td><td colspan="3">உறவினரின் பெயர்:</td></tr>
<tr><td colspan="3">உறவுமுறை:</td><td colspan="3">உறவுமுறை:</td></tr>
<tr><td colspan="3">மாவட்டம்:</td><td colspan="3">மாவட்டம்:</td></tr>
<tr><td colspan="3">மாநிலம்:</td><td colspan="3">மாநிலம்:</td></tr>
<tr><td colspan="3">சட்டமன்றத் தொகுதியின் பெயர்:</td><td colspan="3">சட்டமன்றத் தொகுதியின் பெயர்:</td></tr>
<tr><td>சட்டமன்றத் தொகுதியின் எண்</td><td>பாகம் எண்:</td><td>வரிசை எண்</td><td>சட்டமன்றத் தொகுதியின் எண்</td><td>பாகம் எண்:</td><td>வரிசை எண்</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

(i) நான் வேறு யாதொரு நாட்டின் குடியுரிமையையும் பெற்றிருக்கவில்லை.

(ii) நான் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்காக படிவம் 6 வாயிலாக விண்ணப்பிக்கிறேன், மேலும் எனது பெயர் வேறு யாதொரு சட்டமன்ற தொகுதியிலும் / நாடாளுமன்ற தொகுதியிலும் சேர்க்கப்படவில்லை. ¤

அல்லது

நான் இடம்பெயர்தலின் அடிப்படையில் படிவம் 8 வாயிலாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு விண்ணப்பிக்கிறேன். ¤

(iii) இவ்விண்ணப்பம் தொடர்பாக தவறானதாகவும், எனக்குத் தெரிந்த வரையில் அல்லது நம்புகிற வரையில் தவறாக அல்லது உண்மையென எனக்கு நம்பிக்கையளிக்காத வகையில் மேற்சொன்ன அறிக்கை அல்லது உறுதிமொழியை அளிப்பது, 1950–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (43/1950) 31–ஆம் பிரிவின் கீழ் ஓராண்டு வரை நீட்டிக்கத்தக்க சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கத்தக்க குற்றமென்பதை நான் நன்கறிவேன்.

வாக்காளரின் கையொப்பம் / இடது கை பெருவிரல் ரேகை நாள் விவரத்துடன்

**வாக்குச்சாவடி நிலை அலுவலரின் உறுதிமொழி:** முந்தைய மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தீவிர திருத்த வாக்காளர் பட்டியலிலிருந்து / பட்டியல்களிலிருந்து மேற்சொன்ன விவரங்களை நான் சரிபார்த்துள்ளேன்.

**வாக்குச்சாவடி நிலை அலுவலரின் கையொப்பம்**

**வாக்குச்சாவடி நிலை அலுவலரின் பெயர் மற்றும் அலைபேசி எண்**

**உறுதிமொழிப் படிவத்திற்கான தகவல் தாள்**

உறுதிமொழிப் படிவத்தில் விவரங்களை அளிப்பதற்காக, https://voters.eci.gov.in/ என்ற இணைய முகவரியிலுள்ள முந்தைய சிறப்புத் தீவிர திருத்தத்தின் வாக்காளர் பட்டியலில் விண்ணப்பதாரர்கள் தங்கள் பெயரையும், தொடர்புடைய உறவினர்களின் பெயரையும் சரிபார்க்கலாம். உதவிக்காக, விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். உறுதிமொழிப் படிவத்தில் வழங்கப்பட்ட முந்தைய சிறப்புத் தீவிர திருத்தத்தின் வாக்காளர் பட்டியல்(கள்) விவரங்கள் கிடைக்காத அல்லது தரவுத்தளத்துடன் பொருந்தாத விண்ணப்பதாரர்களுக்கு வாக்காளர் பட்டியல் பதிவு அலுவலர் அறிவிப்பை வெளியிடுவார். அறிவிப்பு கிடைத்ததும், விண்ணப்பதாரர் பின்வரும் வகைப்பாடுகளின் அடிப்படையில் ஆவணங்களை அளிக்க வேண்டும்:

- 01.07.1987 ஆம் நாளுக்கு முன்னர் இந்தியாவில் பிறந்திருப்பின்,
    - வாக்காளரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
- 01.07.1987 மற்றும் 02.12.2004 ஆகிய நாட்களுக்கு இடையேயான காலக்கட்டத்தில் இந்தியாவில் பிறந்திருப்பின்,
    - வாக்காளரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
    - தந்தையின் அல்லது தாயாரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
- 02.12.2004 ஆம் நாளுக்குப் பின்னர் இந்தியாவில் பிறந்திருப்பின்,
    - வாக்காளரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
    - தந்தையின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
    - தாயாரின் பிறந்த நாளை மற்றும் / அல்லது பிறந்த இடத்தை உறுதிசெய்யும் வகையில் கீழே அளிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து யாதொரு ஆவணத்தை அளிக்கவும்.
    - பெற்றோரில் ஒருவர் இந்தியராக இல்லாவிடின், நீங்கள் பிறந்த நேரத்தில் அவருடைய செல்திறனுள்ள கடவுச்சீ (பாஸ்போர்ட்) மற்றும் புகவுச்சீட்டின் (விசா) நகலை அளிக்கவும்.
- இந்தியாவிற்கு வெளியே பிறந்திருப்பின் (வெளிநாட்டிலுள்ள இந்திய தூதரகத்தால் வழங்கப்பட்ட பிறப்புப் பதிவுச் சான்றை இணைக்கவும்).
- பதிவுபெறுதல் / குடியுரிமை வழங்கல் வாயிலாக இந்திய குடியுரிமை பெற்றிருப்பின் (குடியுரிமைப் பதிவுச் சான்றிதழை இணைக்கவும்)

**குறிப்பாகத் தெரிவிக்கப்பட்ட (முழுமையானது அல்ல) ஆவணங்களின் பட்டியல் (மேலே குறிப்பிடப்பட்டிருப்பின் வாக்காளர், தந்தை மற்றும் தாயாருக்கு தனித்தனியாக சுய சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்பட வேண்டும்):**

1. யாதொரு மத்திய அரசின் / மாநில அரசின் / பொதுத்துறை நிறுவனத்தின் நிரந்தப் பணியாளருக்கு / ஓய்வூதியதாரருக்கு வழங்கப்பட்ட யாதொரு அடையாள அட்டை/ ஓய்வூதியம் வழங்கல் ஆணை (PPO)

2. 01.07.1987 – க்கு முன்னர் அரசு / உள்ளாட்சி அமைப்புகள் / வங்கிகள் / அஞ்சல் அலுவலகம் / இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் / பொதுத்துறை நிறுவனங்கள் இந்தியாவில் வழங்கிய யாதொரு அடையாள அட்டை / சான்றிதழ் / ஆவணம்

3. தகுதிவாய்ந்த அதிகார அமைப்பால் வாயிலாக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்

4. கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்)

5. அங்கீகரிக்கப்பட்ட வாரியங்களால் / பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட கல்விச் சான்றிதழ் / மெட்ரிகுலேஷன் சான்றிதழ்

6. தகுதிவாய்ந்த மாநில அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட நிரந்தர வசிப்பிடச் சான்றிதழ்

7 வன உரிமைச் சான்றிதழ்

8. தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட்ட இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பட்டியல் வகுப்பினர் / பட்டியல் பழங்குடியினர் அல்லது யாதொரு சாதிச் சான்றிதழ்

9. தேசிய குடிமக்கள் பதிவேடு (பொருந்தும் இடங்களில்)

10. மாநில / உள்ளூர் அதிகார அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட குடும்பப் பதிவேடு

11. அரசால் வழங்கப்பட்ட நிலம் / வீடு குடியிருப்பு ஒதுக்கீட்டுச் சான்றிதழ்

12. ஆதாரைப் பொறுத்தவரை, ஆணையத்தால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள் பொருந்தும் (காண்க: 09.09.2025 ஆம் நாளிட்ட 23/2025–ERS/தொகுதி.II (பிற்சேர்க்கை II எண் கடிதம்)

13. 01.07.2025 ஆம் நாளிட்ட பீகாரின் சிறப்புத் தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியலின் பகுதி நகல்.

**2005 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் மாநிலங்களில் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தீவிர திருத்தங்கள் தகுதிபெறும் நாட்கள்**

A– சிறப்பு தீவிர திருத்தத்தின் இந்தக் கால அளவில் கீழ் வரும் மாநிலங்கள்/_மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள்

| தொ. எண் | மாநிலங்கள் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள் | இறுதி தீவிர திருத்தம் தகுதிபெறும் நாள் |
|---|---|---|
| 1. | அந்தமான் & நிக்கோபார் | 01.01.2002 |
| 2. | சத்தீஸ்கர் | 01.01.2003 |
| 3. | கோவா | 01.01.2002 |
| 4. | குஜராத் | 01.01.2002 |
| 5. | கேரளா | 01.01.2002 |
| 6. | லட்சத்தீவு | 01.01.2002 |
| 7. | மத்தியப்பிரதேசம் | 01.01.2003 |
| 8. | புதுச்சேரி | 01.01.2002 |
| 9. | ராஜஸ்தான் | 01.01.2002 |
| 10. | தமிழ்நாடு | 01.01.2002 (197 சட்டமன்ற தொகுதிகள்) & 01.01.2005 (37 சட்டமன்ற தொகுதிகள்) |
| 11. | உத்தரப்பிரதேசம் | 01.01.2003 |
| 12. | மேற்குவங்கம் | 01.01.2002 |

B – ஏனைய மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் இறுதி சிறப்பு தீவிர திருத்தம் தகுதிபெறும் நாள்

| தொ. எண் | மாநிலங்கள் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகள் | இறுதி தீவிர திருத்தம் தகுதி பெறும் நாள் |
|---|---|---|
| 1. | ஆந்திரப்பிரதேசம் | 01.01.2002 |
| 2. | அருணாச்சல பிரதேசம் | 01.01.2006 |
| 3. | அசாம் | 01.01.2005 |
| 4. | பீகார் | 01.01.2003 |
| 5. | சண்டிகர் | 01.01.2002 |

| | | |
|---|---|---|
| 6. | தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ | 01.01.2002 |
| 7. | டில்லி | 01.01.2002 |
| 8. | இமாச்சல பிரதேசம் | 01.01.2002 |
| 9. | ஹரியானா | 01.01.2002 |
| 10. | ஜம்மு & காஷ்மீர் | 01.01.2005 |
| 11. | ஜார்கண்ட் | 01.01.2003 |
| 12. | கர்நாடகா | 01.01.2002 |
| 13. | லடாக் | 01.01.2005 |
| 14. | மகாராஷ்டிரா | 01.01.2002 |
| 15. | மணிப்பூர் | 01.01.2005 |
| 16. | மேகாலயா | 01.01.2005 |
| 17. | மிசோரம் | 01.01.2005 |
| 18. | நாகாலாந்து | 01.01.2005 |
| 19. | ஒடிசா | 01.01.2002 |
| 20. | பஞ்சாப் | 01.01.2003 |
| 21. | சிக்கிம் | 01.01.2002 |
| 22. | தெலுங்கானா | 01.01.2002 |
| 23. | திரிபுரா | 01.01.2005 |
| 24. | உத்தரகாண்ட் | 01.01.2003 |